# தமிழ்நாடு அரசிற்கான
# மாற்று மது ஒழிப்புக் கொள்கை

அளிப்பு :

## பாட்டாளி மக்கள் கட்சி

தமிழ்நாடு

ஆவணி 10, திருவள்ளுவர் ஆண்டு 2039
26ஆம் நாள், ஆகஸ்ட் 2008

<u>பொருளடக்கம்</u>


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 3 |
| 2. | மது மனிதனைப் பாதிக்கும் வகைகள் | 4 |
| 3. | அரசு தலையிட வேண்டிய குடியின் எதிர்விளைவுகள் | 6 |
| 4. | மதுவினால் ஏற்படும் பெரும் கேடுகள் | 8 |
| 5. | தமிழ்நாட்டில் மது விற்பனை | 15 |
| 6. | குடிப்பழக்கம் = வறுமை, கல்லாமை | 18 |
| 7. | தமிழ்நாடு அரசின் மதுக் கொள்கை | 19 |
| 8. | டாஸ்மாக் - கள்ளச்சாராயத் தீமையைத் தடுக்குமா? | 20 |
| 9. | மது விற்பனையால் அரசுக்கு இலாபமா? | 21 |
| 10. | அரசியல் அமைப்பு கூறுவது என்ன? | 22 |
| 11. | பூரண மதுவிலக்கு | 23 |
| 12. | உலக நலவாழ்வு அமைப்பு (WHO) கூறுவது என்ன? | 23 |
| 13. | அரசும் மதுவும் - சில கருத்துகள் | 24 |
| 14. | தமிழ்நாடு அரசிற்கான வரைவு மது ஒழிப்புத் திட்டம் | 27 |
| 15. | முடிவுரை | 46 |

**துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.**

— குறள் 926

(உறங்கினவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே மது அருந்துபவரும் நஞ்சு உண்பவரே ஆவர்)

# 1. அறிமுகம்

இந்திய நாடு விடுதலை அடைந்தவுடன் 1948 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் நாள் - காந்தி பிறந்த நாள் முதல் தமிழ் நாட்டில் '**மதுவிலக்கினை**' அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது. ஆனால், அறுபது ஆண்டுகள் கடந்து இன்றைய தமிழ்நாட்டில் அரசாங்கமே '**மதுத் திணிப்பினை**' நடத்திவருகிறது. மதுபான விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண் டுள்ள ஒரே அரசு, உலகிலேயே தமிழ்நாடு அரசு மட்டும்தான் என்ற அவலம் நேர்ந்துள்ளது. இதற்காக ஒவ்வொரு தமிழகக் குடிமகனும் வெட்கித் தலை குனிய வேண்டும்.

மதுபானம் வெறும் வணிகப் பொருள் அல்ல, அது ஒரு போதைப் பொருள். குடிப்பழக்கம் வெறும் பழக்கம் அல்ல, அது ஒரு கொடிய நோய். மது குடிப்பவரை மட்டுமல்ல, அடுத்தவரையும் பாதிக்கும் பெருந்தீமை. எனவே, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் மதுப் பழக்கத்தினை படிப்படியாக, உடனடியாக, உறுதியாகக் கட்டுப் படுத்தி தமிழ்நாட்டினை காப்பாற்ற வேண்டிய தேவை எழுந்துள்ளது. இது ஒரு மக்கள் நல அரசின் அடையாளம் மட்டுமல்ல, கடமையும் கூட.

# 2. மது, மனிதனைப் பாதிக்கும் வகைகள்

மது மனிதனைப் பாதிக்கும் வகைகளை மூன்றாகப் பட்டியலிடு கிறது உலக நலவாழ்வு அமைப்பு (WHO). அவை 1.போதை (Intoxication), 2. அடிமைத்தனம் (Dependence) 3.நச்சுத்தன்மை (Toxicity) ஆகியன ஆகும். இந்த மூன்று விதமான பாதிப்புகளும் குடிப்பவரை யும், அவரது குடும்பத்தினர், நண்பர்களையும், அவரோடு சம்பந்தப் படாத அப்பாவிகளையும் பல்வேறு வழிகளிலும் சேதப்படுத்து கின்றன!

மதுபானம் என்பது பல்வேறு பெயர்களிலும், வடிவங்களிலும் இருந்தாலும் அவை அனைத்தும் அடிப்படையில் எத்தனால் (Ethanol) எனப்படும் எத்தில் ஆல்கஹால் (Ethyl alcohol) வேதிப் பொருள்தான். இந்த வேதிச் சேர்மத்தின் மூலக்கூறு குடித்த உடனேயே குடிகாரரின் ஒவ்வொரு உயிரணுவின் சவ்வுகளையும் மிக எளிதாகக் கடந்து உடலின் ஒவ்வொரு பகுதியிலும் நீக்கமறப் படர்கிறது. இதனால் மதுபானத்தின் பாதிப்பு உடலின் எல்லா பாகத்தையும் பாதிக்கிறது. மதுவால் தாக்கப்படாத பகுதி என உடலில் எந்த இடமும் இல்லை. மதுபானம் மனித குடலில் செரிக்கப்படும் தேவையின்றி நேரடியாக இரத்தத்தில் கலக்கிறது. இதனால், குடிப்பவர் உடனடியாக அதனால் தாக்கப்படுகிறார்.

எனினும், மதுபானம் அனைவரது உடலிலும் ஒரே மாதிரியான பாதிப்பினை ஏற்படுத்துவது இல்லை. பாலினம், கல்லீரல் சுரக்கும் நொதிமங்களின் மரபணு வேறுபாடு உள்ளிட்ட பலவித காரணங் களால் மனிதர்களுக்கிடையே மதுவின் வளர்சிதை மாற்றத்தில் மூன்று முதல் நான்கு மடங்கு வேறுபாடு காணப்படுகிறது. மது மனித உடலில் எத்தகைய வேதிப்பொருளாக செயல்படுகிறது என்பதிலும் இரண்டு முதல் மூன்று மடங்கு வேறுபாடு காணப்படுகிறது.

தனிமனித வேறுபாடுகளைப் பொறுத்து மதுவின் பாதிப்பு, பழக்க வழக்கத்தில் மாற்றம், குடிப்பழக்கத்தின் தன்மை, மதுவுக்கு அடிமையாகும் நிலை, மதுவால் உடலுறுப்புகள் சேதமடையும் தன்மை என அனைத்தும் ஆளுக்கு ஆள் மாறுபடுகிறது. தொடர்ந்து குடிக்கும் சிலர் பெரிய அளவிலான பாதிப்புகள் இன்றி இருப்பதும்,

அவர்களை விட குறைவாகக் குடிப்பவர்கள் கடுமையான பாதிப்பு களுக்கு ஆளாவதும் இதனால்தான். கும்பலாக குடிக்கும்போது சிலர் அமைதியாக இருப்பதும் வேறு சிலர் தாறுமாறாக நடப்பதும் இதனால் தான். எனவே, **மதுவை கட்டுப்படுத்தும் கொள்கைள் வகுக்கப்படும் போது மிக அதிக அளவாக பாதிக்கப்படும் நபர்களை கவனத்தில் கொள்ள வேண்டும்** என்கின்றனர் ஆய்வாளர்கள்.

## தீமை - 1 : போதை (Intoxication)

போதை எனப்படும் குடிமயக்கமானது மதுவின் முதன்மையான தீமைகளுள் ஒன்று. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக மதுவை அருந்துவதால் குடிமயக்கம் ஏற்படுகிறது. அதாவது, சற்று அதிகமானக் குடி போதையை ஏற்படுத்துகிறது. போதை என்பது மனித உடலின் மைய நரம்பு மண்டலத்தை மது பாதிப்பதால் ஏற்படும் விளைவாகும். பன் னாட்டு நோய் வரையறைப் பட்டியலில் போதை ஒரு மருத்துவ நோய்க் குறியீடாக பட்டியலிடப் பட்டுள்ளது. (F 10.0 in ICD - 10)

விபத்துகள், காயமடைதல், வன்முறை, பாதுகாப்பற்ற உடலுறவு போன்ற கேடுகளுக்கு போதை வழி வகுக்கிறது. இக்குடிமயக்கத்தால் உடல் ஊனமாதல், எச்.ஐ.வி தொற்றுதல் உள்ளிட்ட பல பாதிப்புகள் நேருகின்றன. கூடவே, குடிக்காத அப்பாவிகள் பாதிக்கப்படு வதற்கும் போதை காரணமாகிறது.

## தீமை 2: பழக்க அடிமைத்தனம் (Dependence)

மனிதர்கள் மற்றும் விலங்குகளின் மனநிலையை பாதிக்கும் பொருட்களில் மதுவும் ஒன்று என்பது ஆய்வுகள் மூலம் மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. பன்னாட்டளவில் கொடிய போதைப் பொருட்களை பட்டியலிடுவதற்கான விதிமுறைகள் 1971ஆம் ஆண்டில் வகுக்கப் பட்டன. இந்த வரையறைகள் மதுவுக்கும் பொருந்துவதாக உலக நலவாழ்வு அமைப்பு கூறுகிறது.

அதாவது, கஞ்சா, அபின், ஹெராயின் போன்ற கொடிய போதைப் பொருட்கள் எவ்வாறு மனிதனை அடிமைப்படுத்துகின்றனவோ, அதேபோன்று தொடர் குடிகாரர்களை மதுவும் அடிமைப்படுத்து கிறது.

**தீமை 3: நச்சுத்தன்மை (Toxicity)**

மது ஒரு நச்சுப்பொருள். இது உடலில் சுமார் 60 வகையான பாதிப்புகளை ஏற்படுத்துவதாக உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிடு கிறது. ஈரல் அழுகல், பலவிதமான ஈரல்நோய்கள், மூளை பாதிப்பு, இளைஞர்களிடையே மூளை வளர்ச்சி பாதிப்பு போன்ற பல நோய் கேடுகள் நேருகின்றன.

பன்னாட்டு புற்றுநோய் ஆய்வு அமைப்பு (IARC) மது ஒரு புற்றுநோய் உண்டாக்கும் நஞ்சு (Carcinogenic) எனப் பட்டியலிட் டுள்ளது! மதுவால் ஏற்படும் மற்றொரு கோரம் – கர்ப்பிணிப் பெண் கள் குடித்தால், அவர்களுக்கு கோரமான தோற்றமுடைய, குறை பாடுகளுடன் குழந்தை பிறக்கும் ஆபத்து உள்ளது என்பதாகும்!

மது மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கிறது. குடிப்பவர்களுக்கு இருதயக்குழல் நோய்கள், மாரடைப்பு வருவதற் கான வாய்ப்புகளும் அதிகம். இத்தகைய பல்வேறு நோய்களுக்கு மதுவின் நச்சுத்தன்மையே காரணமாகும்.

# 3. அரசு தலையிட வேண்டிய குடியின் எதிர்விளைவுகள்

மதுபானம் மனித உடலில் ஏற்படுத்தும் பாதிப்புகளின் தொடர்ச்சியாக பலவிதமான எதிர்விளைவுகள் தனிமனித அளவிலும், குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஏற்படுகின்றன. இவற்றில் மக்கள் நல அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டியவற்றில் 1. இளைஞர்கள், சிறுவர்களை குடியிடமிருந்து காப்பாற்றுவது, 2. குடிக்காத அப்பாவி களை குடிகாரர்களால் பாதிக்கப்படாமல் காப்பாற்றுவது, 3. குடிகாரர் களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பது- ஆகியன முதன்மை யானவை ஆகும்.

## 1. இளைஞர்கள், சிறுவர்களைக் காப்பாற்றுதல்

இந்தியாவில் குடிக்கும் இளைஞர்கள், சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. அவர்கள் குடிக்கத் தொடங்கும்

வயதும் ஆண்டுக்காண்டு கீழிறங்கி வருகிறது. இது மிகக் கேடான போக்காகும்.

மது நேரடியாக மூளையின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. முழுமையான வளர்ச்சியடையாத நிலையில் இருக்கும் இளம் வயதினரின் மூளை மதுவால் கடுமையாக பாதிப்படைகிறது என்பது பல்வேறு ஆய்வுகளில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மூளை வளர்ச்சி குறைதல், கல்வி கற்கும் திறன் குறைதல், எந்த ஒரு தொழிலுக்கும் தகுதியற்ற நிலைக்கு இளைஞர்கள் தள்ளப்படுதல் போன்ற கேடுகள் நேருகின்றன. கூடவே, குடிப்பழக்கத்திற்கு எளிதில் அடிமையாகி மீளவே முடியாத குடிநோயர்களாக இளைஞர்கள் மாறிப் போவாதும் அதிகம்.

எனவே 'பதினெட்டு வயதில் திருமணம் செய்யலாம், தேர்தலில் வாக்களிக்கலாம் – குடிக்க மட்டும் கூடாதா?' எனும் மூடத்தனமான கேள்விகளுக்கு செவிசாய்க்காமல் இளைஞர்கள் குடிக்கு அடிமை யாவதையும், குடிக்கத் தொடங்குவதையும் தடுக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

மக்கள் தொகை இலாபப்பங்கு (Demographic Dividend) எனப்படும், தமிழக மக்கள் தொகையில் இளைய வயதினர் அதிகமாக இருக்கும் இன்றைய காலகட்டமே –தமிழ்நாடு வளர்ச்சியடைய அதிக வாய்ப்புள்ள காலம் என அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த மாபெரும் இளைஞர் சக்தி பயன்படுத்தப் பட வேண்டுமானால், அந்த இளைஞர் சக்தி குடிப்பழக்கத்திற்கு பலியாகாமல் தடுக்க வேண்டியது கட்டாயமாகும்.

## 2. குடிக்காத அப்பாவிகளை குடிப்பழக்கத் தீமையிலிருந்து காப்பாற்றுதல்

எவ்வாறு அடுத்தவர் அருகே புகைப்பிடிப்பது, புகைக்காத அப்பாவிகளையும் பாதிக்கிறதோ, அதே போன்று குடியால் குடிக்காத அப்பாவிகளும் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக, குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவதால் நேரிடும் விபத்துக்களில் சிக்கி – எந்த குற்றமும் செய்யாத அப்பாவிகள் உயிரிழக்கிறார்கள், காயமடைகிறார்கள். குடிமயக்கத்தால் நேரும் வன்முறை, சண்டைகளில் குடிக்காத

அப்பாவிகள் பாதிப்படைகின்றனர். குடிப்பழக்கம் குடிகாரரின் குடும்பத்தில் வறுமையை அதிகமாக்குவதால், கல்லாமை, ஊட்டச சத்துக் குறைபாடு, உரிய மருத்துவ வசதிகள் இல்லாமை, அடிப்படை தேவைகள் புறக்கணிக்கப்படுதல் போன்றவற்றால் பெண்களும், குழந்தைகளும் பாதிக்கப்படுகின்றனர். குடும்ப வன்முறையும் இவர்களைப் பாதிக்கிறது.

இவ்வாறு, 'குடிக்காதவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை' தடுத்து நிறுத்துவது அரசின் கடமை.

### 3. குடிகாரர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல்

குடிகாரர்களுக்கு 60 வகையான உடல் நலக்கேடுகள் வருவதற்கு வாய்ப்பு இருப்பதாக உலக நலவாழ்வு அமைப்பு கூறுகிறது. கூடவே, விபத்து, வன்முறை, காயமடைதல், வேலை பாதிப்பு, வருமான இழப்பு போன்ற தீமைகளும் நேருகின்றன. குடியின் அளவு அதிகரிக்கும் போது இத்தகைய பாதிப்புகள் பன்மடங்காக பெருகுகின்றன.

எனவே, குடிக்கத் தொடங்காமல் தடுப்பது மட்டுமின்றி-குடிக்கும் அளவினைக் குறைப்பது, குடியால் ஏற்படும் தீய விளைவுகளைக் குறைப்பது, உடல்நல பாதிப்புகளுக்கு உரிய சிகிச்சையளிக்க வழி செய்வது, குடி அடிமைகளை விடுவிப்பது ஆகிய கடமைகளும் அரசுக்கு உண்டு.

# 4. மதுவினால் ஏற்படும் பெரும் கேடுகள்

2002ஆம் ஆண்டில் இருந்த நிலவரத்தின் படி உலகளவில் குடிப்பழக்கத்தால் ஏற்படும் மரணங்கள், மொத்த இறப்புகளில் 3.7 விழுக்காடு என உலகச் நலவாழ்வு அமைப்பு தெரிவிக்கிறது. இந்த மரணங்கள் உரிய வயதாகும் முன்பே நேருகின்றன. அவ்வாறே உலகின் மொத்த நோய்ச் சுமையில் மதுவின் பங்கு 4.4 விழுக்காடு ஆகும்.

ஊட்டச்சத்துக் குறைபாடு, தொற்றுநோய் தாக்க அதிக வாய்ப்பு, தோல்பாதிப்பு, ஈரல் அழுகல், இதயம் மற்றும் மூளையில் பாதிப்புகள்,

ஆண்மைக் குறைவு, குழந்தையின்மை, நினைவுத் திறன் குறைதல், குடும்ப உறவில் பாதிப்பு, வேலைத்திறன் குறைதல், பொருளாதார இழப்பு என 60 பாதிப்புகளைப் பட்டியலிடுகிறது உலக நலவாழ்வு அமைப்பு.

குடிப்பழக்கத்தின் உடல்நலக்கேடுகள் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் சமமாக இல்லை. குடிப்பவர்களில் வசதி படைத்தோரை விட ஏழைகளில் அதிகமானோர் உடல்நலக் கேட்டிற்கு ஆளா கின்றனர். அதேபோன்று போதுமான அளவு நலவாழ்வு வசதிகள் கிடைக்காதப் பிரிவினர் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

அதாவது, பொருளாதார ரீதியிலும், சமூகரீதியிலும் பின்தங்கி யுள்ள மக்கள் குடியால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனவே, நலவாழ்வு ஏற்றத்தாழ்வினை அகற்றும் முயற்சியில் மது ஒழிப்பு ஒரு முக்கிய அங்கம் வகிப்பதாக உலக நலவாழ்வு அமைப்பு கூறுகிறது. சமூக நீதியை நிலைநாட்ட மது ஒழிப்பு அவசியமாகிறது.

குடிகாரர்களைவிட, குடிக்காத மக்கள் ஆரோக்கியமாக நீண்ட நாள் வாழ்வார்கள் என்பது பல ஆய்வுகள் மூலம் மெய்ப்பிக்கப்பட் டுள்ளது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நோய்வாய்ப் படும் நிலை குடிப்பழக்கம் இல்லாதோரிடையே 7.3 விழுக்காடாக இருக்கும்போது, குடிப்பழக்கம் உடையவர்கள் நோய்வாய்ப்படும் வாய்ப்பு 15.3 விழுக்காடாக இருப்பது கண்டறியப்பட்டது. அதாவது, சாதாரண மக்களை விட குடிகாரர்கள் இருமடங்காக நோய்த் தாக்கு தலுக்கு ஆளாகின்றனர்.

தமது உடல் நலம் குறித்து மக்கள் எவ்வாறு உணருகிறார்கள் என்ற கருத்துக்கணிப்பில், குடிக்காதவர்களில் 93 விழுக்காட்டினர் நன்றாக இருப்பதாகக் கூறும்போது, குடிப்பவர்களில் 82 விழுக் காட்டினர் மட்டுமே அவ்வாறு கூறியுள்ளனர்.

கடந்த ஓர் ஆண்டில் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை விழுக்காட்டினர் எனக் கணக்கிட்டதில், குடிக்காத மக்களில் 15 விழுக்காட்டினர் மட்டுமே உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில், குடிப்பவர்களில் 33 விழுக்காட்டினர் நோய்த்தாக்குதலுக்கு ஆளா கினர்!

**தனது உடல்நலம் குறித்து குடிகாரர்கள் மற்றும் குடிக்காதவர்களின் எண்ணம்**

| உடல்நலம் குறித்த எண்ணம் | குடிகாரர்கள் | குடிக்காதவர்கள் |
|---|---|---|
| நன்று / மிக நன்று | 82.4% | 92.8% |
| பரவாயில்லை | 15.9% | 6.5% |
| மோசம் | 1.6% | 0.7% |
| மொத்தம் | 100% | 100% |

**கடந்த 12 மாதத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள்**

| குடிகாரர்கள் | குடிக்காதவர்கள் |
|---|---|
| 32.5% | 14.7% |

Source : Burden and Soci-economic Impact of Alcohol : The Bangalore Study, 2006

## குடி நோய்கள்

### புற்று நோய்

வாய்ப்புற்று நோய், மார்பகப் புற்றுநோய், ஈரல் புற்றுநோய் உள்ளிட்ட பல புற்று நோய்கள் மதுப் பழக்கத்தால் ஏற்படுகின்றன. குடிக்கும் மதுவின் அளவு அதிகரிப்பதற்கு ஏற்ப, புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பும் பன்மடங்காக அதிகரிக்கும்.

### ஈரல் இறுக்கி நோய்

ஈரலின் இணைமம் இற்றுப்போய் இணைமங்கள் மட்டும் மீறி வளர்ச்சியடையும் கோளாறானக் கரணை நோய் எனப்படும் ஈரல் இறுக்கி நோய்க்கு குடிப் பழக்கம் ஒரு முதன்மையானக் காரணமாக உள்ளது.

## கணைய அழற்சி

கணையத்தில் உண்டாகும் வீக்கமான கணைய அழற்சி நோய்க்கும் மதுப்பழக்கமே முதன்மை காரணமாகிறது.

## இருதய நாள பாதிப்பு

உயர் இரத்த அழுத்தம், இருதயம் நின்று போதல், செயலிழத்தல் போன்ற பாதிப்புகளுக்கும் குடிப்பழக்கம் காரணமாகக் கூடும். குருதிப் போக்கினால் ஏற்படும் பக்கவாதத்திற்கும் குடிப்பழக்கம் வழி வகுக்கிறது.

## எச்.ஐ.வி./எயிட்ஸ்

உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸ் பரவுவதற்கு மதுப்பழக்கம் ஒரு முதன்மையான காரணம் என்கிறது உலக நலவாழ்வு நிறுவனம். அந்த அமைப்பு சென்னையில் நடத்திய ஆய்வில், குடிப்பழக்கம் பாதுகாப்பில்லாத உடலுறவிற்கு வழி வகுப்பது தெரியவந்தது. பாலியல் தொழிலாளர்கள் குடிகாரர்களிடம் இதனை வலியுறுத்த முடிவதில்லை.

எனவே, எங்கெல்லாம் மது விற்பனை நடக்குமிடமும் பாலியல் தொழில் நடக்குமிடமும் அருகருகே இருக்கிறதோ, அங்கெல்லாம் எச்.ஐ.வி. தொற்றுவதும் அதிகமாக இருப்பதாகக் கண்டறியப்பட் டுள்ளது. எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதில் மது ஒழிப்பும் முதன்மையான நடவடிக்கையே என்கிறது உலக நலவாழ்வு அமைப்பு.

## விபத்துகள்

உலகம் முழுவதும் விபத்துகள் மற்றும் காயமடைதலால் ஆண்டுக்கு 52 லட்சம் பேர் இறந்து போகின்றனர். உலகின் மொத்த நோய்ச்சுமையில் (burden of discease) மூன்றில் ஒரு பங்கிற்குக் காரணமாக இருப்பது காயமடைதலும், விபத்துகளும்தான்.

உலகில் ஆண்டுக்கு 18 லட்சம் பேர் குடிப்பழக்கத்தால் உயிரி வயதாகும் முன்பே இறந்து போகின்றனர். இதில் 32 விழுக்காடு மரணத்திற்கு கவனக் குறைவான – விபத்து போன்ற காயமடைதலும், 14 விழுக்காடு மரணத்துக்கு வேண்டுமென்றே காயப்படுத்தலும்

# குடிப்பழக்கக் கேடுகள்



காரணமாகிறது. அதாவது, குடிப்பழக்கத்தால் நேரும் இறப்புகளில் பாதியளவு மரணம் காயமடைதல் மூலம் நேருகிறது.

காயமடைவோரில் எத்தனை விழுக்காட்டினர் அதற்கு முன்பாக மரு அருந்தினர் என்பது குறித்து உலக நலவாழ்வு நிறுவனம் பல நாடுகளில் ஆய்வு மேற்கொண்டதில், 45 விழுக்காடு வரையிலும் கூட குடித்திருந்தது கண்டறியப்பட்டது. இந்த ஆய்வில், இந்தியா வில் காயமடைவோரில் 21 விழுக்காட்டினர், அதற்கு முன்பு மது பானம் உட்கொண்டது தெரிய வந்துள்ளது.

## வன்முறை

தனிநபர்களுக்கு இடையே ஏற்படும் சண்டை, வன்முறை, அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு குடிப்பழக்கம் ஒரு முதன்மையான காரணமாகும். குடும்பவன்முறை, பாலியல் வன்முறை, இளைஞர் களுக்கு இடையேயான சண்டை, குழு மோதல் போன்ற பலவிதமான தனிநபர் வன்முறைகளிலும் மது அங்கம் வகிக்கிறது.

குடிப்பழக்கம் இளைஞர்களிடையே ‘சமூக விரோத மனப் பான்மையை’ உருவாக்குகின்றது. போக்கிலிகள் (ரவுடி) கூட்டத்தினர் பெரும்பாலும் குடிகாரர்களாகவும் இருக்கின்றனர். குடிப்பழக்கம் பாலியல் வன்முறைக்கு வழிவகுக்கிறது.

## தற்கொலை

தற்கொலை செய்து கொள்வோரில் கணிசமானோர் போதை யில்தான் தற்கொலை செய்து கொள்கின்றனர். சென்னையில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் படி 34 விழுக்காட்டினர் தற்கொலை செய்து கொள்ளும்போது போதையில் இருந்ததாகக் கணக்கிடப் பட்டுள்ளது. பெங்களூரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குடிக்காத வர்களைவிட, குடிப்பழக்கம் உள்ளவர்கள் தற்கொலை செய்து கொள்ள 25 மடங்கு அதிக வாய்ப்பு இருப்பதாக அளவிடப்பட்டுள்ளது.

## வேலை பாதிப்பு

தொழில் நடக்கும் இடங்களில் வேலை பாதிக்கப்படுவதற்கும் மதுப்பழக்கம் காரணமாகிறது. குடிகாரர்கள் பலரும் ஏதேனும் ஓர்

இடத்தில் வேலை செய்கின்றனர். இவர்கள் அந்த இடத்தில் நடக்கும் வேலையை பாதிப்பதன் மூலம் உற்பத்தி இழப்பினை ஏற்படுத்து கின்றனர்.

பணியில் கவனக்குறைவு, அடிக்கடி விடுமுறை எடுத்தல், காலதாமதம், விபத்துகள், சச்சரவுகள் போன்ற பல பாதிப்புகள் பணியிடத்தில் ஏற்படுகின்றன. தொழிலாளர்களுக்கும் நிருவாகத்திற் கும் இடையே மோதல் ஏற்படவும் மது வழி செய்கிறது.

## குடும்ப பாதிப்பு

குடி ஏராளமான குடும்பங்களைச் சீரழித்து வருகிறது. குறிப்பாக ஏழைகள் வாழ்வில் மிக மோசமான இழப்புகளை ஏற்படுத்துகிறது மது. குடிப்பவர் உள்ள வீட்டில், வருமானத்தில் கணிசமானப் பகுதி குடிப்ப தற்கே செலவாகிவிடுகிறது. இதனால், உணவு, கல்வி, வீடு, மருத்துவம் என முதன்மையான தேவைகளுக்குப் பணம் இல்லாமல் போய்விடுகிறது.

மிக அதிகமாகக் குடிப்போரால் அந்தக் குடும்பமே மதிப்பிழக் கிறது. குடும்பங்கள் பிரிவதற்கும் இது காரணமாகிறது. பெங்களூரில் நடந்த ஆய்வில், பெருங்குடிகாரர்கள் தங்களது வருமானத்தை விடவும் அதிகமான அளவு மது அருந்துவது கண்டறியப்பட்டது. இத்தகைய பெரும் குடிகாரர்களின் குடும்பங்களில் 59% குடும்பங்கள் தமது அன்றாட வாழ்க்கைக்கே அவர்களின் உறவினர்களை நம்பி இருக்கின்றன.

அதாவது, அதிகக் குடிப்பழக்கம் உள்ளோரின் குடும்பங்கள் அடுத்தவரை அண்டிப் பிழைக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இத்தகையக் குடும்பங்களில் 10% குடும்பத்தினர் தமது குழந்தை களை வேலைக்கு அனுப்புகின்றனர் எனக் கண்டறியப்பட்டது.

## குடும்ப வன்முறை

குடித்துவிட்டு மனைவி, பிள்ளைகளை அடிப்பது நாடெங்கும் நடக்கிறது. குறிப்பாக, பெரும் குடிகாரர்கள் தமது குடும்பத்தினரை அடிக்கின்றனர். ஏழைக் குடும்பங்களில் இந்த வன்முறை அதிகம் நடக்கிறது. தென்னிந்தியாவில் கை விடப்பட்ட பெண்கள் குறித்து

ஆய்வு செய்த உலக நலவாழ்வு நிறுவனம் பெரும்பாலானோரில் கணவர்கள் குடிகாரர்களாக இருந்ததைக் கண்டறிந்தது. மனைவியைத் துன்புறுத்துவது குறித்த ஓர் ஆய்வு இத்தகையக் கணவர்களில் 33% குடிகாரர்கள் என்கிறது.

குடிகாரர்கள் தமது குடும்பக் கடமைகளைச் செய்யத் தவறுவ தால், அதுவே ஒரு வன்முறையாக அமைகிறது. பிள்ளைகளைப் பட்டினிப் போடுதல், வேலைக்கு அனுப்புதல், பள்ளிக்கு அனுப்ப மறுத்தால் – இவையும் வன்முறைதான்.

**மதுவும் வறுமையும்**

வறுமையை அதிகரிப்பதில் மதுப்பழக்கத்திற்கு முக்கியப் பங்கு உண்டு. உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, உலக சுகாதார நிறுவனம் ஆகியவை இணைந்து இந்தியாவில் நடத்திய ஓர் ஆய்வில் மதுப்பழக்கம் உடையவர்கள் குடியால் உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவதால் அப்போது ஏற்படும் மருத்துவ செலவுகளை சமாளிக்க தமது சொத்துக்களை விற் கவோ, அடகு வைக்கவோ நேருகிறது. இதனால், தமது சொத்துக்களை இழந்து கடன்காரர்களாகி கொடிய மீள முடியாத வறுமையில் வீழ் கிறார்கள் என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதாவது, மருத்துவமனைச் செலவுகளுக்காக சொத்துகளை இழப்பதற்கும் கடனில் வீழ்வதற்கும் குடிக்காதவர்களைவிட குடிப்ப வர்களுக்கு மிக மிக அதிக வாய்ப்பு இருப்பதாக நிரூபித்துள்ளனர்.

# 5. தமிழ்நாட்டில் மது விற்பனை

## 1. அதிகரிக்கும் மதுபான உற்பத்தி

அகில இந்திய அளவில் மதுபான உற்பத்தி அளவு வேகமாக அதிகரிக்கும் மாநிலம் தமிழ்நாடு. கடந்த பத்தே ஆண்டுகளில் மதுபான உற்பத்தி இங்கு இருமடங்கு அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டில் 11 கோடி பல்க் லிட்டர் அளவு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் தயாரிக்கப்பட்டது. இதுவே பத்தாண்டுகள் கடந்து 2007-08 இல் 27 கோடி பல்க்

லிட்டராக அதிகரித்துள்ளது. இதே கால கட்டத்தில் பீர் வகைகளின் தயாரிப்பு அளவு 5 கோடி பல்க் லிட்டரில் இருந்து 16 கோடி பல்க் லிட்டராக அதிகரித்துள்ளது.

**இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி**

**(1996-97 முதல் 2007-08) (உற்பத்தி அளவு - கோடி பல்க் லிட்டர்களில்)**

| ஆண்டு | மதுபானம் | பீர் |
|---|---|---|
| 1996 - 1997 | 12.78 | 5.33 |
| 1997 - 1998 | 10.90 | 5.25 |
| 1998 - 1999 | 9.81 | 5.29 |
| 1999 - 2000 | 11.74 | 4.23 |
| 2000 - 2001 | 12.43 | 5.76 |
| 2001 - 2002 | 13.32 | 5.06 |
| 2002 - 2003 | 11.62 | 4.32 |
| 2003 - 2004 | 14.04 | 5.95 |
| 2004 - 2005 | 16.82 | 7.78 |
| 2005 - 2006 | 19.86 | 10.62 |
| 2006 - 2007 | 23.87 | 13.68 |
| 2007 - 2008 | 27.02 | 15.80 |

## 2. அதிகரிக்கும் மதுபான விற்பனை

இந்திய அளவில் மதுபான விற்பனை மிக வேகமாக அதிகரித்து வரும் மாநிலம் தமிழ்நாடுதான். இங்கு மதுபான விற்பனை 1997-98 இல் 130 லட்சம் பெட்டிகளாக இருந்தது. இதுவே பத்தாண்டு களுக்குப் பின்னர் 2007-08 இல் 306 லட்சம் பெட்டிகளாக அதிகரித்துவிட்டது.இதே காலகட்டத்தில் பீர் விற்பனை 101 லட்சம் பெட்டிகளில் இருந்து 196 லட்சம் பெட்டிகளாக அதிகரித்துள்ளது (ஒரு பெட்டி என்பது 12 பாட்டில் கள் ஆகும்). ஆக, பத்தாண்டுகளில் மதுபான விற்பனை இரு மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது.

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனை (1996-97 முதல் 2007-08)




## 3. அதிகரிக்கும் அரசின் மதுபான வருவாய்

இந்தியாவிலேயே மது விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயை அதிகமாக நம்பி நடக்கும் அரசாங்கம் தமிழ்நாடு அரசுதான். மதுபான விற்பனை மூலமாக 1997-98 இல் தமிழ்நாடு அரசுக்கு கிடைத்த வருவாய் 1970 கோடி ரூபாய்தான். ஆனால், 2007-08 இல் இதுவே 8817 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. அதாவது பத்தே ஆண்டு களில் மது வருவாய் மூன்று மடங்கிற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

## மதுபான விற்பனை மூலமாக தமிழ்நாடு அரசுக்கு கிடைக்கும் வருவாய் (1996-97 முதல் 2007-08)



# 6. குடிப்பழக்கம் = வறுமை, கல்லாமை

குடிப்பழக்கம் வறுமையை அதிகமாக்குகிறது. வறுமை குடிப் பழக்கத்தை அதிகமாக்குகிறது. இவை ஒன்றை ஒன்று அதிகமாக்கும் நச்சுச் சுழலாக இயங்குகின்றன. கூடவே கல்வியறிவு இன்மை, வறுமை, வேலையில்லாமை போன்றவை குடிப்பழக்கத்திற்குக் காரணங்களாகின்றன.

தமிழ்நாட்டில் தருமபுரி, விழுப்புரம், கிருட்டிணகிரி, திருவண்ணா மலை ஆகிய மாவட்டங்கள் தனி நபர் வருமானத்திலும், எழுத்தறி விலும் மிகமிகப் பின்தங்கிய மாவட்டங்களாக இருக்கின்றன. பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகளில் கடைசி இடங்களை இந்த மாவட்டங்கள்தான் பிடித்தன. தமிழ்நாடு மாநில மேம்பாட்டுப் பட்டியலில் இம்மாவட்டங்கள் தமிழ்நாட்டிலேயே கடைநிலை மாவட்டங்களாக உள்ளன. இந்தியாவின் பின்தங்கிய மாநில மாகக் கருதப்படும் பிகார் மாநிலத்தைவிட – இந்த மாவட்டங்களின் நிலைமை மிக மோசம்.

| மாவட்டம் | தமிழ்நாட்டின் 30 மாவட்டங்களின் மானிட மேம்பாட்டுப் பட்டியலில் இடம் | சராசரி தனிநபர் வருமானம் | எழுத்தறிவு பெற்றோர் அளவு % |
|---|---|---|---|
| **சென்னை** | **முதல் இடம்** | **ரூ. 5497** | **86%** |
| தருமபுரி | கடைசி 30ஆவது இடம் | ரூ. 2245 | 64% |
| கிருட்டிணகிரி | 29ஆவது இடம் | ரூ. 2245 | 64% |
| விழுப்புரம் | 28ஆவது இடம் | ரூ. 1801 | 70% |
| திருவண்ணாமலை | 27ஆவது இடம் | ரூ. 2034 | 74% |
| **மாநில சராசரி** | — | **ரூ. 3363** | **79%** |

இவ்வாறு, தலாவாரி வருமானம், எழுத்தறிவு, மாநில மேம் பாட்டுக் குறியீடு என அனைத்திலும் மிக மிகப் பின் தங்கி கடைசி இடத்தைப் பிடிக்கும் இதே தருமபுரி, விழுப்புரம், கிருட்டிணகிரி,

திருவண்ணாமலை மாவட்டங்கள்தான் டாஸ்மாக் மதுபான விற்பனையில் மாநிலத்திலேயே முதல் இடத்தைப் பிடித்து சாதனை படைக்கின்றன. மாதம்தோறும் இலக்கைவிட அதிகமாக மது விற்பனையாவது இம்மாவட்டங்களில்தான்.

எடுத்துக்காட்டாக, 2008 சூலை மாதத்தில் தருமபுரி மாவட்டத்தில் 30,385 பெட்டிகள் மது விற்கவேண்டும் என்பதை அரசாங்கம் இலக்காக நிர்ணயித்தது. ஆனால், உண்மையில் விற்பனை ஆனது 43,980 பெட்டிகள்! அதாவது இலக்கைவிட 44% அதிக மது விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதேபோன்றுதான் தனிநபர் வருவாய் குறைவாக இருக்கும் மாவட்டங்கள் தொடர்ந்து மதுபான விற்பனையில் முன்னிலையில் இருந்து வருகின்றன. இதற்கு மாறாக தனிநபர் வருவாய் அதிகமாக உள்ள மாவட்டங்கள் மதுவிற்பனையில் பின்தங்கி உள்ளன.

இது வறுமைக்கும் மதுவுக்கும் உள்ள தொடர்பினை எடுத்துக் காட்டுகிறது. எனவே, வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, கல்வியறிவு என எல்லா மேம்பாட்டு இலக்குகளையும் அடைய மதுவைக் கட்டுப் படுத்துவது ஒரு கட்டாயத் தேவை.

# 7. தமிழ்நாடு அரசின் மதுக்கொள்கை

‘கள்ளச் சாராயத்தின் மூலம் உயிர் இழப்பு ஏற்படுவதைத் தடுப்பது மற்றும் மாநில அரசிற்கு வரவேண்டிய ஆயத்தீர்வை வருவாயைக் காப்பது என்ற இரட்டை நோக்கங்களைக்’ கொண்டிருப்பதாக தமிழக அரசின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு 2008-2009 கூறுகிறது.

‘அரசாங்கமே மதுவிற்பனையை அதிகரிக்க இலக்கு நிருணயிப்பது சட்டத்துக்குப் புறம்பானது. அதிக மதுபான விற்பனை செய்ய அரசே வற்புறுத்தக் கூடாது’ என்று கோரி பாட்டாளி மகளிர் சங்கம் பொது நல வழக்கு தொடர்ந்தபோது, அதற்கு எதிராக வாதாடிய அரசு வழக்கறிஞர் “கள்ளச்சாராய விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்காகவும், மாநிலத்தின் வரி வருவாயைப் பெருக்குவதற்காகவுமே இலக்கு நிருணயிக்கப்படுகிறது” என உச்சநீதிமன்றத்தில் கூறினார்.

இவ்வாறு, அரசாங்கமே மதுபான விற்பனையை அதிகரிக்க இலக்கு நிருணயிப்பது உலகின் எந்த மூலையிலும் இல்லாத அவலம் ஆகும்! எந்த ஒரு மக்கள் நல அரசும் இப்படியொரு கொடுஞ்செயலை செய்யத் துணியாது! இப்படிச் செய்யும் அரசு மக்கள் நல அரசாக இருக்க முடியாது!

# 8. டாஸ்மாக் - கள்ளச்சாராயத் தீமையைத் தடுக்குமா?

ஆங்கிலேய காலனியாதிக்க அரசாங்கம் 1870ஆம் ஆண்டு களில் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக என்று கூறி மதுபான உற்பத்தியை ஏலத்துக்கு விடும் முறையைக் கொண்டு வந்தது. சுமார் 140 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயக் கொடுங்கோல் ஆட்சி யாளர்கள் சொன்ன அதே காரணத்தைதான் தமிழக அரசு இன்றைக்கும் சொல்கிறது.

தமிழ்நாட்டு மக்களுக்கு கள்ளச்சாராயத்தின் மூலமாக மட்டுமே இழப்பு ஏற்படவில்லை. டாஸ்மாக்கில் விற்கப்படும் நல்ல சாராயமும் தீமையைத்தான் ஏற்படுத்துகிறது. கள்ளச்சாராயம் திடீர் உயிரிழப்பு கள் மூலமாக மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்துகிறது. ஆனால், அரசின் நல்ல சாராயமோ தினம் தினம் பலநூறு கள்ளச்சாராய சாவுகளுக்கு ஈடான பேரிழப்பை பரபரப்பு ஏதுமின்றி நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. அதாவது, கள்ளச்சாராய கேடுகளுக்கு டாஸ்மாக் கேடுகள் கொஞ்சமும் குறைந்தவை அல்ல. மாறாக – டாஸ்மாக்கினால் நேரும் கேடுகள் பன்மடங்கு அதிகம்!

கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காகத்தான் அரசு மதுபானத்தை அனுமதிப்பதாகக் கூறுவதே மோசடியான வாதம். அரசாங்கத்திடம் வலிமை வாய்ந்த காவல்துறை இருக்கிறது. யாரை வேண்டுமானாலும் உள்ளே தள்ளும் அடக்குமுறைச் சட்டங்கள் இருக்கின்றன. சகல விதமான அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு காவல் துறை மற்றும் அரசு நிருவாக அமைப்பின் மூலமாக கள்ளச் சாராயத்தை முழுவதுமாக ஒழிக்க முடியவில்லை எனச் சொல்வது ஏமாற்றும் தந்திரமே தவிர வேறல்ல.

கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லை என ஆட்சியாளர்கள் சொல்வது தாங்கள் ஆளும் தகுதியை இழந்து விட்டதாகச் சொல்வ தற்கு ஒப்பானதாகும்.

# 9. மதுவிற்பனையால் அரசுக்கு இலாபமா?

அரசின் வருவாய்க்காக மதுபான விற்பனைக்கு வழி செய்வதாகக் கூறுவது மக்கள் விரோதச் செயல். அரசாங்கத்தற்கு மது விற்பனை மூலம் எவ்வளவு வருவாய் வருகிறதோ, அதைவிட அதிகமான நிதியை அரசே மதுவுக்காக இழக்க நேருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. நலவாழ்வு, சட்டம் ஒழுங்கு, நீதிமன்றச் செலவுகள், சாலை விபத்துகள் போன்ற பல சேவைகளுக்கு வருவாயை விட அதிக செலவினை அரசாங்கம் செலவிட நேருவதாக ஆராய்ச்சிகள் மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அரசாங்கம் மக்கள் நல்வாழ்வுக்காக செலவிடும் நிதியில் கணிசமான அளவு மதுவால் வீணடிக்கப்படுகிறது! இந்தியப் பொது மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக வருவோரில் 20 முதல் 30 விழுக்காடு நோயாளிகள் மதுவால் பாதிக்கப்பட்டே வருகின்றனர். எனவே, மதுவை ஒழித்துக்கட்டினால் அரசின் மருத்துவச் செலவி னத்தில் கணிசமான நிதியை நியாயமானத் தேவைகளுக்குச் செலவிட முடியும்!

இந்தியாவில் 2003-04ஆம் ஆண்டில் குடிப்பழக்கத்தால் ஏற்பட்ட தீமைகளைச் சமாளிக்க அரசுகளுக்கு தேவைப்பட்ட நிதி ரூ.24,400 கோடியாக இருந்ததாகவும், ஆனால் மதுபான விற்பனை மூலம் மத்திய, மாநில அரசுகளுக்குக் கிடைத்த வருவாய் 21,600 கோடி எனவும் தேசிய மனநல மற்றும் நரம்பியல் நிறுவனத்தின் (NIMHANS) ஆய்வு தெரிவிக்கிறது.

இவையின்றி தனி மனிதர்களுக்கும், குடும்பங்களுக்கும், வேலை செய்யும் இடங்களுக்கும், சமுதாயத் திற்கும் ஏற்படும் இழப்பு மிக மிக அதிகமாகும். மதிப்பிடக்கூடிய இழப்புகள் மட்டுமின்றி, மன உளைச்சல், உறவினர் மரணம், கணவன் - தந்தையை இழத்தல் போன்ற ஈடுசெய்ய இயலாத இழப்புகள் ஏராளம் உள்ளன. இவற்றை மதிப்பிட இயலாது.

ஆகவே, அரசின் வருவாய்க்காக மது விற்பனையை அதிக மாக்கும் தமிழக அரசின் செயல் உண்மையில் கண்ணை விற்று சித்திரம் வாங்கும் செயல்தான்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசின் இலக்கு மக்கள் நலனைக் காப்பதாகத்தான் இருக்க வேண்டும். மாறாக, மக்களைச் சுரண்டுவதும் போதையில் தள்ளுவதும் அரசின் நோக்கமாக இருக்கக்கூடாது. தமிழக மக்கள் தனி நபராக, குடும்பமாக, சமுதாயமாக முழுமையான வாழ்க்கை வாழவேண்டுமெனில் – தமிழ்நாடு அரசு மதுவைக் கட்டுப்படுத்தும் கொள்கைக்கு மாற வேண்டும். மதுவைக் கட்டுப்படுத்த முன்வராமல் மாநிலத்தின் மேம்பாடு இனி ஒரு போதும் சாத்தியப்படாது!

# 10. அரசியல் அமைப்பு கூறுவது என்ன?

மது ஒழிப்பு அரசியல் சாசனத்தின் 47ஆவது பிரிவில் சேர்க்கப் பட்டு அரசின் கடமையாக்கப்பட்டது. ‘ஊட்டச்சத்துக் கிடைப்பதை மேம்படுத்தவும், அடிப்படை வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும், நலவாழ்வினை உயர்த்தவும் தேவையானவற்றைத் தமது தலையாயக் கடமைகளாக அரசு கருதவேண்டும். அதிலும் குறிப்பாக போதை யூட்டும் மதுவகைகளையும், உடலுக்குத் தீங்கிழைக்கும் நச்சுப் பொருட்களையும், மருந்துக்காக அன்றி வேறுவிதமாகப் பயன்படுத்து வதைத் தடை செய்வதற்காக மதுவிலக்கை செயல்படுத்த வேண்டும்’ என்கிறது அரசியல் அமைப்பின் 47ஆவது பிரிவு.

ஆனால், அரசியல் அமைப்புச் சட்டம் 246இன் கீழ் 7ஆவது அட்டவணையில் மாநிலப் பட்டியல் எனப்படும் பட்டியல் 2இல் 8ஆவது பொருளாக மதுபானம் வைக்கப்பட்டுள்ளது. ‘போதை யூட்டும் மதுவகைகள், அதாவது போதையூட்டும் மதுவகைகளின் உற்பத்தி, வைத்திருத்தல், போக்குவரத்து, கொள்முதல், விற்பனை ஆகியவை’ மாநில அரசின் பணி என்கிறது இந்தப் பிரிவு. இதன் மூலம் மதுபானம் மீதான முழுக் கட்டுப்பாடும் மாநில அரசிடம் விடப்பட்டுள்ளது.

# 11. பூரண மதுவிலக்கு

இன்றையப் பொருளாதார, சமூக, அரசியல் சூழலில் உடனடியாக 'பூரண மதுவிலக்கு' என்பது உடனடியாக சாத்தியமாகக் கூடியது இல்லை என்றாலும் அதனைப் படிப்படியாக அடைய முடியும்.

வன்முறை, போர், திருட்டு, கொலை, எய்ட்ஸ் போன்ற பல தீமைகளை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்பது மக்கள் விருப்பம். ஆனாலும் அவையெல்லாம் 'முழுவதுமாக' ஒழிக்கப்படு வது என்பது சாத்தியமில்லாத செயல்தான். - இங்கு முழுவதுமாக ஒழிக்க வேண்டும் என்பது விருப்பம் மட்டும்தான். கட்டுப்படுத்த வேண்டும் என்பதுதான் நடைமுறை சாத்தியமானது. அதேபோன்று மதுவிலக்கு என்பதும் 'மதுவின் தீமைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்' என்பதைத்தான் குறிக்கிறது! அதாவது, பூரண மது விலக்கு என்பது விரும்பத்தக்கதுதான் என்றாலும் அதனைப் படிப்படி யாகத்தான் அடைய முடியும்.

திருட்டை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட முடியாது என்பதற்காக யார் வேண்டுமானாலும் திருட அனுமதிக்கப்படுவது இல்லை. எய்ட்சை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட உடனடியாக முடியாது என்பதற் காக அதனைக் கட்டுப்படுத்தாமல் விட்டுவிட முடியாது. அதே போன்றுதான் மது ஒழிப்பு உடனடியாக சாத்தியமாகாது என்பதற்காக - அதனை அரசு ஊக்கப்படுத்தக் கூடாது என்பதும்!

# 12. உலக நலவாழ்வு அமைப்பு (WHO) கூறுவது என்ன?

குடிப்பழக்க கேடுகளைத் தடுப்பதற்காக உலக நலவாழ்வு அமைப்பு (WHO) பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. பன்னாட்டு அளவில் மது ஒழிப்புக்கான உடன்படிக் கையை உருவாக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான தீர்மானமும் அண்மையில் முன்மொழியப்பட்டுள்ளது.

அரசாங்கங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் உலக நலவாழ்வு அமைப்பு பரிந்துரைத்துள்ளது. அவை:

- மதுக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், திறந்திருக்கும் நேரத்தைக் குறைத்தல், வாங்க அனுமதிக்கும் வயது வரம்பை உயர்த்துதல் - உள்ளிட்ட வழிகளைப் பின்பற்றி மதுபானம் சரளமாகக் கிடைப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும்.
- குடித்துவிட்டு ஊர்திகள் ஓட்டுவதைக் கடுமையாகத் தடுக்க வேண்டும்.
- விலை உயர்வு, வரி உயர்வின் மூலம் வாங்கும் தேவையைக் குறைக்க வேண்டும்.
- குடியின் தீமை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- விளம்பரங்கள், மதுபான உற்பத்தியை ஊக்குவித்தல், சந்தைப்படுத்துதல், இளைஞர்களை மதுவை நோக்கி ஈர்த்தல் ஆகியவற்றைத் தடுக்க வேண்டும்.
- மதுவால் பாதிக்கப்படுவோருக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும்.

— என்கிறது உலக நலவாழ்வு அமைப்பு (WHO).

# 13. அரசும் மதுவும் - சில கருத்துகள்

மதுபானம் – ஒரு சராசரி வணிகப்பொருள் அல்ல. அது ஒரு கேடு விளைவிக்கும் போதைப் பொருள். எனவே, மது உற்பத்தி, சந்தைப் படுத்துதல், சில்லரை விற்பனை என அனைத்தின் மீதும் அரசின் கட்டுப்பாடு தேவை என்பது உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலைப்பாடு. ஆனால், அந்தக் கட்டுப்பாடு எந்த வகையானதாக இருக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்துகள் உள்ளன. அவை:

## 1. மதுவிலக்கு (Prohibition)

மதுவினை அரசுக்கு வருமானம் தரும் ஒரு பொருளாகப் பார்க்கக் கூடாது. அதனால் கிடைக்கும் வருவாயைவிட, சட்டம் ஒழுங்கு,

நலவாழ்வு, குற்றம், விபத்து, சமூகப் பாதுகாப்பு எனப் பல வழி களிலும் அரசு செலவிடும் நிதி அதிகம். மதுவால் கிடைக்கும் பொருளாதாரப் பலன்களைவிட அதனால் சமுதாயம் இழப்பது பன் மடங்கு அதிகம். போதைப் பொருளான மதுவினை முழுவதுமாகத் தடை செய்ய வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது.

முழு மது விலக்கு கள்ளச்சாராயம், மதுக் கடத்தல் போன்ற தீமைகளுக்கு வழிசெய்கிறது என்பது உண்மைதான் என்ற போதிலும், மது விலக்கு இருக்கும் போது ஏற்படும் தீமையைவிட, மது விலக்கு இல்லாத நிலையில் ஏற்படும் கேடுகளே அதிகம் என்பது மெய்ப் பிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு உண்மையாக முயன்றால் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியும் என்பதே உண்மை.

## 2. அரசிற்கு வருவாய் (Revenue)

மாநில அரசின் முதன்மையான வருவாய் ஈட்டும் வழிகளில் ஒன்றாக மதுபான விற்பனை மீதான வரி விளங்குகிறது. பல்வேறு கவர்ச்சிகரமான இலவசத்திட்டங்களை செயல்படுத்தும் மாநில அரசு மதுபான விற்பனையின் மூலம் கிடைக்கும் வருவாயைப் பெருமளவு நம்புகிறது. ஓர் ஏழையின் வருவாயை வழிப்பறி செய்து, அந்த ஏழைக்கே கருணை காட்டி உதவி செய்யும் மோசடி இது. இதில் பெரும் சோகம் என்னவெனில், ஏழைகளிடம் கொள்ளையடிப்பதில் அரசின் பங்குதான் ஏழைக்கு வருகிறது. மற்றொரு பங்கு மதுபான நிறுவனங்களுக்குப் போய்விடுகிறது.

வருவாய் நோக்கில் அரசு மதுவிற்பனையை அனுமதிப்பதனால், கள்ளச்சாராயம் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட வாய்ப்பு இருப்பதால், அதில் சிறிதளவு நன்மை உண்டு. அதே போன்று, வரியை உயர்த்துவது மது விற்பனையைக் குறைக்கும் என்பதாலும் அரசின் வருவாய் நோக்கம் மற்றொரு நன்மையாக இருக்கிறது. அதாவது, மது விற்பனையைக் குறைக்கும் நோக்கில் மதுவின் விலையை உயர்த்துவது நல்லது.

ஆனால், மது விற்பனை அதிகமானால் அரசின் வருவாயும் உயரும் எனக் கருதி தனியார் நிறுவனங்களைப் போன்று அரசாங்கமே மக்கள் மீது மதுவைத் திணிப்பது இதில் உள்ள மாபெரும் ஆபத்தாகும்.

## 3. தேர்ந்தெடுக்கும் உரிமை (Freedom of Choice)

மக்களாட்சி நடக்கும் நாட்டில் மக்களின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் அரசாங்கம் தலையிடக் கூடாது. தனிநபர்கள் என்ன செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என எல்லாவற்றையும் அரசாங்கம் தீர்மானிக்கக் கூடாது. நுகர்வோர்கள் மூடர்கள் அல்ல. அவர்களுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. தனக்கு எது நன்மை, எது தீமை என்பது அவரவர்க்கு தெரியும். எனவே, சுதந்திரமான சமூகத்தில் 'குடிப்பதைத் தடுப்பது' மக்களின் தனிமனித உரிமையில் தலையிடும் செயல். 'பொறுப்புடன் குடிப்பதற்கு' மக்களுக்குத் தெரியும். குடித்துவிட்டு பொறுப்புடன் நடக்கவும் தெரியும் - எனப் பேசப்படுகிறது. இக்கருத்தை மதுபான நிறுவனங்கள் பரப்புகின்றன.

ஆனால், மது ஒரு போதைப் பொருள். குடியைத் தேர்வு செய்பவர்கள் அதன் அனைத்துத் தீமைகளையும் முழுமையாக உணர்ந்தும் அறிந்தும் குடிப்பது இல்லை. குடியை நுகர்வோர் உரிமையுடனோ, மனித உரிமையுடனோ தொடர்புப்படுத்தி பார்க்க இயலாது. மது மெல்லக் கொல்லும் நஞ்சு. அது குடிப்போரை மட்டுமல்ல, குடிக்காதவர்களையும் கொல்லும். எனவே, எந்தத் தனிநபருக்கும் தற்கொலை செய்து கொள்ளவோ, அடுத்தவரைக் கொலை செய்யவோ உரிமை இல்லை. குடிப்பழக்கத்தை ஒருபோதும் தனிநபர்களின் தேர்ந்தெடுக்கும் உரிமையாகக் கருதமுடியாது.

## 4. சட்டத்திற்கு எதிரானது

மதுபானத்தை விற்பது சமூக நியதிகளுக்கு எதிரானது, பொருளாதாரத்தை சீர்கெடுப்பது, உடல் நலத்திற்குக் கேடானது என்பதெல்லாம் ஒரு புறம் இருக்க - மதுபானம் இந்திய அரசியல் அமைப்புக்கே எதிரானதாக இருக்கிறது. நாட்டின் மிக உயர்வான உச்ச சட்டமான அரசியல் அமைப்பே மதுவிலக்கை வலியுறுத்துவதால் - மதுவை ஒழிப்பது அரசாங்கத்தின் அடிப்படைக் கடமையாகிறது.

# 14. தமிழ்நாடு அரசிற்கான வரைவு மது ஒழிப்புத் திட்டம்

## இலக்கு (Goal)

பொது சுகாதாரத்தையும் சமுதாய நல்வாழ்வினையும் மேம்படுத்துதல்

## குறிக்கோள் (Objective)

- சிறுவர் மற்றும் இளைஞர்கள் மதுபானத்தைப் பயன்படுத்தாமல் தடுத்தல்
- குடிக்காதவர்கள் குடியால் பாதிக்கப்படாமல் தடுத்தல்
- குடியால் குடிப்பவர்களுக்கு ஏற்படும் கேடுகளைக் குறைத்தல்
- குடிப்பழக்கத்தையும் மதுபான விற்பனையையும் படிப்படியாகக் குறைத்தல்
- குடியின் தீமைகளை அனைவரையும் உணரச் செய்தல்
- மதுபான வருவாயை அரசின் செலவுகளுக்காக சார்ந்திருக்கும் போக்கிலிருந்து விடுபடுதல், மதுவால் கிடைக்கும் வருவாயை மது ஒழிப்புக்காக மட்டுமே செலவிடுதல்
- மதுபான விற்பனையையோ, குடிப்பழக்கத்தையோ ஊக்கப் படுத்தவும் அதிகரிக்கவும் மேற்கொள்ளப்படும் மறைமுக விளம்பரம், அரசின் கொள்கை வகுப்பில் தலையிடுதல், அழுத்தம் கொடுத்தல் உள்ளிட்ட அனைத்து விதமான முயற்சி களையும் முறியடித்தல்
- கள்ளச்சாராயம் மற்றும் மதுக் கடத்துதலை முற்றிலுமாக தடுத்தல்.

## நடவடிக்கைகள்

மதுவினால் தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்படாமல் தடுக்கவும், மதுவினால் ஏற்படும் தீமைகளைத் தவிர்க்கவும், மக்களின் நலவாழ்

வினை மேம்படுத்தவும் தேவைப்படும் மெய்ப்பிக்கப்பட்ட வழி முறைகள்:

**மதுக்கடைகளின் எண்ணிக்கை**

## 1. மதுபானக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அவை அமைக்கப்படும் இடங்களுக்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும்.

*எதற்காக?*

குடிப்பதைக் குறைக்க வேண்டுமெனில், மதுபானம் கிடைப் பதைக் குறைக்க வேண்டும் என்கிறது உலக நலவாழ்வு அமைப்பு (WHO). இதற்கு கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது ஒரு கட்டாயத் தேவையாக இருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் எங்கும் எந்த நேரத்திலும் தேநீர் அருந்த முடிகிறது. இதற்கு காரணம் எல்லா இடத்திலும் தேநீர்க் கடைகள் இருப்பதுதான். இதே போன்ற நிலை இப்போது 'டாஸ்மாக்' மதுக் கடைகளுக்கும் வந்துவிட்டது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

கூடவே, மதுக்கடைகள் அமையும் இடங்கள் குறித்தும் கடுமை யான கட்டுப்பாடு விதிப்பது தேவையாகும். பள்ளி, கல்லூரி, வழிபாட்டு இடம், பூங்கா, கடற்கரை, சுற்றுலாப் பகுதி, பேருந்து நிலையம், கேளிக்கைப்பகுதி, திரையரங்கம், விளையாட்டுத் திடல் போன்று பெண்களும், குழந்தைகளும் அதிகம் வருகைதரும் பகுதிகளில் மதுக்கடைகள் இருப்பதற்கு தடைவிதிக்க வேண்டும். இத்தகைய இடங்களில் மது அருந்தும் கூடம் (பார்) முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும். அதே போன்று- மக்கள் கூட்டாக எதிர்ப்பு தெரிவிக்கும் பகுதிகளில் உள்ள மதுக்கடைகளும் மது அருந்தும் கூடங்களும் மூடப்பட வேண்டும்.

*எனவே*

**1.1. தமிழ்நாட்டில் உள்ள மொத்த மதுக்கடைகள் எண்ணிக்கையை பாதியாகக் குறைக்க வேண்டும்.**

**1.2. எதிர்காலத்தில் புதிய மதுபானக் கடைகள் திறக்கப்படாது என்பதை அரசின் கொள்கையாக அறிவிக்க வேண்டும். மீதமுள்ள மதுக்கடைகளின் எண்ணிக்கையை ஆண்டுக்கு 5 அல்லது 10 விழுக்காடு வீதம் குறைக்க வேண்டும்.**

**1.3. முக்கியமான இடங்களில் உள்ள மதுக்கடைகளை மூட வேண்டும்.**

**1.4. மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் இடங்களில் உள்ள கடைகள் மூடப்பட வேண்டும்.**

**1.5. உள்ளாட்சி அமைப்புகள் மதுக்கடைகளை மூட தீர்மானம் இயற்றினால், அத்தகைய கடைகளை அரசு மூட வேண்டும்.**

## திறந்திருக்கும் நேரம்

### 2. மதுக்கடைகள் திறந்திருக்கும் நேரத்தை ஒரு நாளில் 8 மணி நேரம் அல்லது அதற்கும் கீழாகக் குறைக்க வேண்டும். விடுமுறை நாட்களில் மதுக்கடைகளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும்.

*எதற்காக?*

மதுக்கடைகள் திறந்திருக்கும் நேரத்தைக் குறைத்தால் குடிப் பழக்கமும் குறையும், அதன் தீமைகளும் கட்டுப்படுத்தப்படும் என்கிறது உலக நலவாழ்வு அமைப்பு.

மதுக்கடைகள் திறந்திருக்கும் நேரத்திற்கு ஏற்ப, அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் அதிகமாகின்றன. குறிப்பாக சாலை விபத்து, தற்கொலை, வன்முறை ஆகியவை அதிகரிப்பதற்கு மதுக்கடைகள் திறந்திருக்கும் நேரமும் ஒரு காரணம்.

*எனவே*

**2.1. மதுக்கடைகள் திறந்திருக்கும் நேரத்தை ஒரு நாளில் 8 மணி நேரத்திற்கு கீழாகக் குறைக்க வேண்டும். குறிப்பாக, இது காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே என வரையறுக்க வேண்டும்.**

**2.2. சனி, ஞாயிறு கிழமைகள் மற்றும் அரசு விடுமுறை நாட்களில் மதுக்கடைகளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும். திருவிழா நாட்கள், அதற்கு முன், பின் நாட்கள் - ஆகிய நாட்களில் மதுக்கடைகளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும்.**

**2.3. அரசு சம்பளம் வழங்கும் நாள், அதற்கு அடுத்த நாளில் விடுமுறை அளிக்க வேண்டும்.**

### மது வாங்கும் வயது

## 3. தமிழ்நாடு அரசு உத்தரவின்படி 21 வயதுக்குக் கீழானோருக்கு மது விற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை 25 வயதாக உயர்த்தி, கட்டாயமாக நடை முறைப்படுத்த வேண்டும்.

*எதற்காக?*

இளைஞர்களின் உடலும், மூளையும் முழுமையான வளர்ச்சி யடையாத நிலையில் இருப்பதால் குடிமயக்கம் அவர்களை எளிதில் பாதிக்கிறது. உலகமெங்கும் நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகள், இளைய வயதில் குடிக்கத் தொடங்குபவர்கள்தான் குடிக்கு அதிகம் அடிமையாவதாகவும், தீங்கிழைக்கும் குடிகாரர்களாக மாறுவதாகவும் தெரிவிக்கின்றன.

ஆனால், இளைய வயதில் 21 வயதுக்கு முன்பு குடிப்பது சட்டத்துக்குப் புறம்பானது என இளைஞர்களுக்கும் தெரிவதில்லை. மதுபானம் விற்பவருக்கும் தெரிவதில்லை. இந்தியாவில் இளம் வயதில் குடிப்போரின் அளவு ஆண்டுக்காண்டு அதிகரித்து வரு கிறது. இது 1990 ஆம் ஆண்டில் 2 விழுக்காடாக இருந்தது, 2006ஆம் ஆண்டில் 14 விழுக்காடாக அதிகரித்துள்ளது. முதன்முதலாக குடிக்கத் தொடங்கும் வயது 1986ஆம் ஆண்டில் 19 வயதாக இருந்தது, 2006ஆம் ஆண்டில் 13.5 வயதாகக் குறைந்துவிட்டது. இவ்வாறு இளைஞர்கள் குடிப்பது அதிகரிக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ்நாட்டில் 21 வயதுக்குக் குறைவானோருக்கு மது வகைகளை விற்பது தடை செய்யப்படுவதாக தமிழ்நாடு அரசின் 2005-2006

ஆம் ஆண்டுக்கான மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகிறது. இந்த உத்தரவு உறுதியுடன் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், இத்தகைய விதிமுறை பின்பற்றப்படுவதாகவோ, இதனை மீறிய வர்கள் தண்டிக்கப்பட்டதாகவோ செய்திகள் இல்லை! தமிழ்நாட்டில் மது வாங்க அனுமதிக்கப்படும் வயது 21 ஆக இருக்கும் நிலையில் - புது தில்லியில் 25 வயதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மது வாங்கும் வயதை அதிகமாக்கி உறுதியாக செயல்படுத்தினால், ஒட்டுமொத்த மது விற்பனையும், அதனால் ஏற்படும் தீமைகளும் குறையும் என்கிறது உலக நலவாழ்வு அமைப்பு (WHO).

*எனவே*

**3.1. சட்டம் அனுமதிக்கும் வயதுக்குக் கீழ் மதுபானம் வாங்குவதும் அவர்களுக்கு விற்பதும் தண்டனைக்குரிய குற்றம் என்பது குறித்து விரிவான பரப்புரை மேற்கொள்ளப்பட வேண்டும். மதுக்கடை களிலும், மதுபான புட்டிகளிலும் இது குறித்த தெளிவான அறிவிப்பு கள் வைக்கப்பட வேண்டும். விதிமுறைகளை மீறுவோருக்கு உரிய தண்டனை அளிக்கப்பட வேண்டும்.**

**3.2. தமிழ்நாட்டில் தற்போது 21 வயது என உள்ளதற்கு பதிலாக 25 வயதுக்குக் கீழானவர்கள் மதுபான வகைகளை வாங்குவதும், அவர்களுக்கு மதுபானம் விற்பதும் தண்டம் மற்றும் தண்டனைக் குரிய குற்றமாக்கப்பட வேண்டும்.**

## குடி மயக்கத்தில் ஊர்தி ஓட்டுதல்

## 4. குடித்துவிட்டு ஊர்தி ஓட்டுவதை முற்றிலுமாகத் தடுக்க வேண்டும். மீறுவோருக்கு கடுமையான தண்டம் மற்றும் தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

*எதற்காக?*

உலகில் ஆண்டுக்கு 18 லட்சம் பேர் குடிப்பழக்கத்தால் உரிய வயதாகும் முன்பே இறந்து போகின்றனர். இதில் 32 விழுக்காடு மரணத்திற்கு விபத்து காரணமாக இருக்கிறது.

பெங்களூரில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் விபத்துகளில் காயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டோரில், 28 விழுக்காட்டினர், விபத்துக்கு முன்பு மதுபானம் அருந்தியது கண்டறியப்பட்டது.

தலையில் அடிபடுவதன் மூலம் மூளை பாதிக்கப்பட மது மிகப் பெரிய காரணமாக இருக்கிறது. குடி மயக்கத்தில் இருப்போருக்கு சிகிச்சை அளிப்பதும் சவாலான செயலாக இருப்பதால், தலையில் அடிபடுவோர் இறக்கவும் குடியே காரணமாகிறது.

மதுவால் ஏற்படும் விபத்துகளில் மிகப் பெரிய சோகம், மது அருந்தாத அப்பாவிகளும் அதனால் காயமடைவதும், இறப்பதும் தான். இந்த சோகம் நாள்தோறும் செய்தித்தாள்களில் செய்தியாக வந்துகொண்டிருக்கிறது.

குடித்துவிட்டு ஊர்தி ஓட்டுவதை முழுமையாகத் தடுப்பதன் மூலம், குடிப்பழக்கம் குறையும். அதைவிட முக்கியமாக குடிக்காத அப்பாவிகள் விபத்துகளில் அடிபட்டு இறப்பதையும், காயமடைவதையும் தடுக்க முடியும். குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவோருக்கு நிச்சயமாகத் தண்டனை கிடைக்கும் என்ற நிலையில் மட்டுமே இது சாத்தியமாகும்.

இந்திய இயக்க ஊர்திகள் சட்டம் 1988 (The Motor Vehicle Act 1988)-இன் கீழ் ஒருவர் ஊர்தி ஓட்டும்போதோ, ஓட்ட முயற்சிக்கும் போதோ, அவரது குருதியில் 30mg/100ml அளவு மது இருந்தாலோ அல்லது மூச்சுக்காற்று பரிசோதனையில் அவர் குடித்திருப்பதாகத் தெரிந்தாலோ - அவருக்கு முதன்முறை 6 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது 2000 ரூபாய் தண்டம் அல்லது இவை இரண்டும் சேர்த்து அளிக்க இயலும். இரண்டாம் முறையாக இதே குற்றத்தை மூன்றாண்டுகளுக்குள் மீண்டும் செய்தால் 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ரூபாய் 3000 தண்டம் அல்லது இவை இரண்டையும் அளிக்க இயலும்.

ஆனால், இச்சட்டப்பிரிவு முறையாக செயல்படுத்தப்படுவது இல்லை. கடந்த 2007-2008ஆம் ஆண்டில் சுமார் 15000 ஓட்டுனர் உரிமங்கள் மட்டுமே தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ பறிக்கப் பட்டுள்ளன. காவல்துறையினரிடம் மூச்சுக்காற்றினை பரிசோதனை

செய்யும் கருவிகள் (Breath Analyzers) போதுமான எண்ணிக்கையில் இல்லை. மருத்துவமனைகளில் குருதியில் மதுவின் அளவைக் கண்டறியும் (Blood alcohol content testing equipment) கருவிகள் போதுமான எண்ணிக்கையில் இல்லை எனப் பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. (Times of India, 22-8-2008)

*எனவே*

**4.1. குடித்துவிட்டு ஊர்தி ஓட்டுபவருக்கு அதிக தண்டமும், கடுமை யான தண்டனையும் அளிக்க வேண்டும். இந்திய இயக்க ஊர்திகள் சட்டம் 1988-இன் கீழ் அதிக அளவு தண்டம் மற்றும் சிறைத் தண்டனையை அளிக்க வேண்டும்.**

**4.2. குடித்து விட்டு ஊர்தி ஓட்டுபவரது ஓட்டுனர் உரிமத்தை முதல் முறை தற்காலிகமாகவும், இரண்டாம் முறை நிரந்தரமாகவும் தடை செய்ய வேண்டும்.**

**4.3. அனைத்து ஊர்தி சோதனைச் சாவடிகளிலும், அனைத்து ஊர்தி ஓட்டிகளையும் - குடித்திருக்கிறார்களா என்பதைக் கண்டறியும் மூச்சுக் காற்று பரிசோதனைக்கு (Breath test) கட்டாயமாக உட்படுத்த வேண்டும். சுற்றுக் காவல் பணியில் ஈடுபடும் காவலர்களும் ஆங்காங்கே இத்தகைய சோதனையை (Randam Breath test) மேற்கொள்ள வேண்டும். இதற்கான சோதனைக் கருவிகளை தேவையான அளவுக்கு வாங்கி காவல்துறையினருக்கு அளிக்க வேண்டும்.**

**4.4. அனைத்து மருத்துவமனைகளிலும் குருதி மது அளவினைக் கண்டறியும் (BAC) கருவிகளை வைத்திருப்பதைக் கட்டாயமாக்க வேண்டும். விபத்துகளில் காயமடைவோரின் குருதி மது அளவினை அளவிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வழிசெய்ய வேண்டும்.**

**4.5. குடித்துவிட்டு ஊர்தி ஓட்டுபவருக்கு தண்டனை கிடைக்க வழிவகுக்கும் விதமாக இரத்தத்தில் மதுவின் அடர்த்தி (BAC - Blood Alcohol Concentration) அளவு 0.02g/100ml என உச்சவரம்பு நிருணயிக்க முயற்சிக்க வேண்டும்.**

## மதுபான விலை

## 5. மதுபானத்தின் விலையைத் தொடர்ந்து அதிகரிக்க வேண்டும்.

*எதற்காக?*

மதுவின் விலையை அதிகமாக்கும்போது, குடியால் ஏற்படும் தீமைகளான விபத்துகள், வீட்டுச் சண்டைகள் குறைவதாக ஆய்வு மெய்ப்பித்துள்ளன. பண வீக்கத்தின் விளைவாக பண மதிப்பு குறைதல், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பின் விளைவாக தனி நபர் வருவாய் அதிகரித்தல் போன்ற காரணங்களைக் கருத்தில் கொண்டு மதுபான வகைகளின் விலை தொடர்ந்து அதிகரிக்கும் வண்ணம் விலையை உயர்த்த வேண்டும்.

மதுபானத்தின் விலை அதிகமாவதால், ஏழைகளின் பணம் சுரண்டப்படும் என்பது ஓரளவுக்கு உண்மைதான். ஆனாலும், குறைந்த விலையில் அதிகமாகக் குடிப்பதைவிட அதிக விலையில் குறைவாக குடிப்பது ஒப்பீட்டளவில் நல்லதுதான். அதாவது, மதுவின் விலை அதிகரிப்பதால் ஏற்படும் இழப்பைவிட குடி குறைவதால் கிடைக்கும் நன்மை அதிகமானதாக இருக்கும். விலை அதிகரிக்கும் போது தனிநபரின் மது அருந்தும் அளவு குறைவதுடன், தன் வருமானம் இல்லாத இளைஞர்கள் குடிப்பழக்கத்தில் வீழ்வது தடுக்கப்படும்.

*எனவே*

**5.1. மதுபானங்களின் விலை தொடர்ந்து அதிகரிக்கும் வண்ணம் அதன் மீதான வரியை ஆண்டுதோறும் அதிகமாக்க வேண்டும். இந்த வரி உயர்வு பணவீக்க விகிதம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அதிகரிப்பதைவிட அதிக அளவாக இருக்க வேண்டும்.**

## பொது இடங்களும் குடிப்பழக்கமும்

## 6. பொது இடங்களிலும் பணியிடங்களிலும் குடிப்பதையும், குடித்தவர்களையும் அனுமதிக்கக் கூடாது.

*எதற்காக?*

பொது இடங்களில் குடிக்காத அப்பாவிகள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் குடிகாரர்களால் அல்லல்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, குடித்துவிட்டு திரைப்படம் பார்க்க வருபவர்களால், பணம் கொடுத்து திரைப்படம் பார்க்கும் மற்றவர்கள் பாதிக்கப்படுகின்றனர். பொது நிகழ்ச்சிகளிலும் திருவிழாக்களிலும் குடிகாரர்கள் நுழையும் போது அங்கு தேவையற்ற சண்டைகள் நேருகின்றன. அப்பாவிகள் தாக்கப்படுகின்றனர். பேருந்து, கடற்கரை, சாலை என பல இடங்களிலும் முன்பின் தெரியாதோர் குடிகாரர்களால் பாதிப்படைகின்றனர். இவற்றில் மிக மோசமான பாதிப்பு, குடிமயக்கத்தில் வேலைக்கு வருவோரால் ஏற்படுகிறது.

இவ்வாறு குடிக்காதவர்கள் பாதிக்கப்படுவது தனி மனித உரிமைகளுக்கு எதிரானதாகும். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். குடிக்காத எந்த ஒரு நபரும் குடியால் பாதிப்படைய அனுமதிக்கக் கூடாது. கூடவே, பொது இடங்களில் குடித்துவிட்டு நுழைவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டால், அதனால் குடிப்பழக்கமும் குறையும்.

*எனவே*

**6.1. தமிழ்நாட்டில் பொது இடங்களிலும், உணவகங்களிலும் குடிப்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளதை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும். இதனை மீறுவோர் தண்டிக்கப்பட வேண்டும்.**

**6.2. பொது இடங்களான பூங்காக்கள், கடற்கரை, சுற்றுலாப்பகுதி, பேருந்து நிலையம், தொடர்வண்டி நிலையம், திரையரங்கம், பேருந்து, தொடர்வண்டி, சமுதாயக் கூடம், பொது நிகழ்ச்சி, கல்லூரி விழா, திருவிழா போன்ற எந்தப் பொது இடத்திலும் குடிப்பவர்களை அனுமதிக்கக் கூடாது. இத்தகைய இடங்களில் குடித்துவிட்டு நுழைவதை சோதனை செய்யவும், தண்டம் விதிக்கவும் உரிய வழிமுறைகள் வகுக்கப்பட்டு பின்பற்றப்பட வேண்டும்.**

**6.3. அரசு மற்றும் தனியார் பணியிடங்கள் அனைத்திலும், குடித்துவிட்டு வேலைக்கு வருவதை முற்றிலுமாகத் தடுக்க வேண்டும்.**

6.4. அரசால் அனுமதிக்கப்பட்ட டாஸ்மாக் மது அருந்தும் கூடங்களை (பார்கள்) தவிர்த்து தமிழ்நாட்டில் 72 மன்றங்களுக்கும், 478 உணவகங்களுக்கும் மது வழங்க உரிமம் அளிக்கப்பட்டுள்ள தாக தமிழக அரசு கூறுகிறது. இத்தகைய உரிமங்களை மென் மேலும் அதிகமாக்கக் கூடாது. அரசு மது விற்பனை நேரம் குறைக்கப்படும்போது அதற்கு ஏற்ப, இத்தகைய அரசு சாரா மது அருந்தும் கூடங்களின் நேரமும் குறைக்கப்பட வேண்டும். (எதற்காகவும், இப்போதுள்ள நேர அனுமதியை அதிகமாக்கக் கூடாது)

## விளம்பரம்

## 7. மறைமுக மதுபான விளம்பரங்களைத் தடுக்க வேண்டும்.

*எதற்காக?*

அதிகரித்துவரும் இளைஞர் குடிப்பழக்கத்திற்கும், குடிக்கத் தொடங்கும் வயது குறைவதற்கும் விளம்பரங்கள் முதன்மையான காரணங்களாக உள்ளன. நேரடி மதுபான விளம்பரங்கள் இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனால், மதுபான நிறுவனங்கள் மறைமுகமாக விளம்பரங்களை மக்கள் மீது திணிக்கின்றன. திரைப்படம், விளையாட்டு, பாடல், இளைஞர் விழாக்கள் போன்ற வற்றின் மூலமாகவும், மறைமுக விளம்பரங்கள் மூலமாகவும் மதுபான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக 20:20 கிரிக்கெட் போட்டிகள் மூலம் மதுபான விளம்பரங்கள் செய்யப்பட்டன. தண்ணீர் வகைகள், குளிர்பானம் கண்ணாடி குவளைகள், விமான நிறுவனம் என பல மறைமுகப் பொருட்கள் மூலமாக மதுபான விளம்பரம் திணிக்கப்படுகிறது. மேலை நாடுகளில் மதுபான விற்பனை குறைந்து வருவதால், பன்னாட்டு மதுபான நிறுவனங்கள் இந்திய இளைஞர்கள் மீதும், சிறுவர்கள் மீதும் மதுவைத் திணிக்கும் சதிச் செயலை செய்து வருகின்றன. இது நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

திரைப்படங்களும், தொலைக்காட்சி தொடர்களும் குடிப்பது இயல்பான பழக்கம் என்பது போல சித்தரிக்கின்றன. குறிப்பாக,

இளைஞர்கள் கூட்டாக சேர்ந்தாலே குடிப்பது போலவும், சோகமான சூழலும், மகிழ்ச்சியைக் கொண்டாடவும் குடிப்பது போலவும் காட்டப்படுகின்றது. வீடுகளில் உள்ள சிறுவர்களைக் கூட பாதிக்கும் வகையில் பாடல் காட்சிகளில் குடிப்பது போன்ற பாடல்கள் தேவை யின்றி உருவாக்கப்படுகின்றன. உண்மையில் இவை எல்லாம் திட்டமிட்டு திணிக்கப்படும் மறைமுக மதுபான விளம்பரங்கள் தான்.

*எனவே*

**7.1. மது உற்பத்தியாளர்கள் அதே பெயரில் வேறு பொருட்களை தயாரிப்பதும், விற்பதும், விளம்பரப்படுத்துவதும் தடை செய்யப்பட வேண்டும்.**

**7.2. திரைப்படங்கள், தொலைக்காட்சிகளில் தேவையற்ற குடிக்கும் காட்சிகள் தவிர்க்கப்பட அரசு முயற்சிக்க வேண்டும். குறிப்பாக குடிக்கும் காட்சி உள்ள படங்களுக்கு வரிச்சலுகை அளிக்கக் கூடாது. அத்தகைய படங்கள் எதற்கும் அரசின் விருது, நிதி உதவி எதையும் அளிக்கக் கூடாது.**

## விழிப்புணர்வு

## 8. மதுவின் தீமை மற்றும் மது ஒழிப்புச் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

*எதற்காக?*

மதுவால் ஏற்படக் கூடிய கேடுகள் குறித்து பரவலான விழிப் புணர்வு இல்லை. மது ஒழிப்பு சட்டங்கள் உருவாக்கப்பட்டாலும், அத்தகைய சட்டங்கள் குறித்தும், தண்டனை குறித்தும் மக்களிடையேயும், சட்டத்தை செயல்படுத்துவோரிடையேயும் விழிப்புணர்வு இருப்பது ஒரு கட்டாயத் தேவையாகும்.

*எனவே*

**8.1. பள்ளிகள், கல்லூரிகள் போன்ற கல்வி அமைப்புகளில் மது குறித்த விழிப்புணர்வு ஒரு அங்கமாக இருக்க வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் உள்ள குழுக்கள் அனைத்தும் மதுவுக்கு எதிரான செயல்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

**8.2. பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் மூலமாக மது எதிர்ப்பு பரப்புரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

**8.3. மது ஒழிப்புச் சட்டங்கள், விதிகள் குறித்து, தொடர்புடைய அரசாங்க ஊழியர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.** குறிப்பாக, மதுக்கடை ஊழியர்கள் மது வாங்கும் வயது குறித்தும், போக்குவரத்து காவலர்கள் 'குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவது' குறித்தும் – அனைத்தையும் அறிந்தவர்களாக இருக்கச் செய்ய வேண்டும். மது ஒழிப்புச் சட்டங்களை செயல்படுத்துவது குறித்து காவல் துறையினர் அனைத்து நிலைகளிலும் முழுமையாக அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

## மருத்துவ உதவி

## 9. குடிநோய்களுக்கு மருத்துவ உதவி மற்றும் சிகிச்சை அளிக்க வேண்டும்.

*எதற்காக?*

குடிநோயர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அறிப்பது, குறிப்பாக குடி அடிமைகளாக ஆகும் முன்பே அவர்களைக் கண்டறிந்து சிகிச்சையளித்து காப்பாற்ற வேண்டும் என உலக நலவாழ்வு அமைப்பு கூறுகிறது. குடி அடிமைகளுக்கு மறுவாழ்வு அளிப்பது, குடித்து விட்டு விபத்துகளில் சிக்குவோருக்கு சிறப்பு சிகிச்சையும் தேவை தான். அதேசமயம், ஆரம்ப நலவாழ்வு மையங்கள் அளவிலேயே செவிலியர்கள், மருத்துவர்கள், நலவாழ்வு பணியாளர்கள் மூலமாக குடிநோயர்களை முன்கூட்டியே கண்டறிந்து அவர்களுக்கு உரிய சிகிச்சையும், வழிகாட்டுதலும் வழங்கி வருமுன் காப்பது மிகத் தேவையான நடவடிக்கையாகும். அத்தகைய சிறப்பு நலவாழ்வு திட்டங்கள் குடியின் தீமைகளைக் குறைக்கும்.

*எனவே*

**9.1. ஆரம்ப குடிகாரர்கள் குடியிலிருந்து விடுபட சிறப்பு நலவாழ்வு திட்டத்தை உருவாக்க வேண்டும்.**

**9.2 குடி நோயர்களுக்கு மருத்துவ சிகிச்சை, அவசர சிகிச்சையில் குடிகாரர்களுக்கு சிறப்புக் கவனம் - போன்று மருத்துவ உதவிகளை அதிகரிக்க வேண்டும்.**

**கள்ளச்சாராயம்**

## 10. கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்.

*எதற்காக?*

அரசு மது விற்பனையை ஊக்கப்படுத்துவதற்கு கள்ளச் சாராயத்தை கட்டுப்படுத்த எனக் காரணம் கூறுகிறது. இது ஒரு நியாயமற்ற வாதம். கள்ளச்சாராயத்தை சாக்காகக் கூறி அரசே மது விற்பதால் ஏற்படும் தீமைகளை விட, கள்ளச்சாராயத்தால் ஏற்படக் கூடிய தீமை பன்மடங்கு குறைவுதான் என உலக நலவாழ்வு அமைப்பும், இந்திய அரசின் உணவுப் பதப்படுத்துதல் துறையும் கூறுகின்றன. அரசாங்கம் தனது காவல்துறை மூலமாகவும், நிருவாக அமைப்பு கள் மூலமாகவும் கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்த முடியும் என்பதே உண்மை.

*எனவே*

**10.1 கள்ளச்சாராயத்தை ஒழித்துக்கட்டவும், மீண்டும் தலையெடுக்கா மல் தடுக்கவும் விரிவான 'கள்ளச் சாராய தடுப்புத் திட்டம்' வகுக்கப்பட வேண்டும்.**

**10.2 தமிழ்நாடு அரசின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, அரசு ஆணை எண். 444 (25-3-1991)-இன் படி கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் காவல்நிலையங்களின் நிலைய இருப்பு அலுவலர்கள் ஆகியோர் கள்ளச்சாராயத்தினை கட்டுப்படுத்தி ஒழிப்பதில் முக்கியப் பொறுப்பேற்கிறார்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த பொறுப்புடையோர் பட்டியலை விரிவுபடுத்த வேண்டும். உள்ளூர் அளவில் உள்ளாட்சி மன்றத் தலைவரையும் கள்ளச்சாராயத்திற்கு பொறுப்பாக வேண்டும். முதல் தவறுக்கு இடைக்கால நீக்கம், இரண்டாம் தவறுக்கு நிரந்தர நீக்கம் ஆகிய தண்டனைகளுக்கு கிராம நிருவாக அலுவலர், காவல் நிலைய**

இருப்பு அலுவலர், ஊராட்சிமன்றத் தலைவர் உட்படுத்தப்பட வேண்டும்.

10.3 ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கள்ளச்சாராய குற்றம் நடக்கும் பகுதிகளில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர் பொறுப்பாக்கப்பட்டு அவர்கள் மீது இடைக்கால நீக்கம், நிரந்தர நீக்கம் உள்ளிட்ட தண்டனைகள் அளிக்கப்பட வேண்டும்.

10.4 கள்ளச்சாராயத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கும் கிராம நிருவாக அலுவலருக்கு ஊக்கத்தொகை, ஊதிய உயர்வு அளிக்க வேண்டும். காவல்நிலைய இருப்பு அலுவலருக்கு ஊக்கத்தொகை, பதவி உயர்வு அளிக்க வேண்டும்.

10.5 கள்ளச்சாராயமும் கஞ்சா, அபின், ஹெராயின் போன்ற கொடிய போதைப்பொருள் வகையை சேர்ந்தது என்பதால், கொடிய போதைப் பொருட்களை காட்டிக்கொடுப்பவருக்கு ஊக்கத்தொகை அளித்து, அவர்களது அடையாளத்தை கமுக்கமாக வைப்பது போன்று - கள்ளச்சாராயத்தை காட்டிக் கொடுப்போருக்கும் ஊக்கத்தொகை அளிப்பதுடன் அவர்களைக் குறித்த தகவல்கள் கமுக்கமாக வைக்கப்படும் என அறிவிக்க வேண்டும்.

10.6 மதுவிலக்குக் கண்காணிப்புக் குழுக்களை அனைத்து சிற்றூர் களிலும் அமைக்க வேண்டும். இதேபோன்று மாவட்டம், வட்டம், ஒன்றியம் அளவிலான கண்காணிப்புக் குழுக்களை அமைத்து, அவற்றில் மகளிர் அமைப்புகள், தன் உதவிக்குழுக்கள், மத அமைப்புகளின் தலைவர்கள், காந்தீயவாதிகள், தொண்டு நிறுவனங்கள் ஆகியோரை பங்கெடுக்க செய்ய வேண்டும். இத்தகைய மாவட்ட, வட்ட, ஒன்றிய மதுவிலக்கு கண்காணிப்புக் குழுக்களுக்கு உரிய அதிகாரமும், நிதி உதவியும் அளித்து அவை குறிப்பிட்ட கால இடைவெளியில் கூட வழிவகுக்க வேண்டும்.

10. 7. கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும் விற்பதையும் கண்டுபிடிக்க தனி உளவுப் பிரிவு தொடங்கப்பட வேண்டும். காவல் துறையில் புதிய, நேர்மையான இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சியளித்து இப்பிரி வில் சேர்க்க வேண்டும்.

**10.8 கள்ளச்சாராயத்திற்கான மூலப்பொருளாக மெத்தனால் இருப்ப தால், தொழிற்சாலை பயன்பாட்டிற்கான மெத்தனால் பயன் பாட்டினை தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும், விதிமுறை களை கடுமையாக்க வேண்டும். மீறுவோர் கட்டாயமாகத் தண்டிக்கப்பட வேண்டும்.**

## அரசின் மது விற்பனை

## 11. விற்பனையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் அரசாங்கம் நேரடியாக மதுக்கடைகள் நடத்துவதை தொடர வேண்டும்.

*எதற்காக?*

**த**மிழ்நாட்டில் மது விற்பனை அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளது. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது மற்றும் பீர் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமையை, 'டாஸ்மாக்' (தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்) பெற்றுள்ளது! இதன் மூலம் அரசாங்கமே மது விற்பனையில் ஈடுபடுவதால் மது குறித்த ஒரு சாதகமான பார்வை உருவாக்கப்படு கிறது என்பது உண்மைதான்! அதே நேரத்தில், மது விற்பனையை என்ன நோக்கத்திற்காக அரசே ஏற்று நடத்துகிறது என்பதுதான் இதில் கவனிக்கப்பட வேண்டியது ஆகும்.

மதுபான உற்பத்தி, விற்பனை மீது அரசின் முழுமையானக் கட்டுப்பாடு இருப்பதை உலக நலவாழ்வு அமைப்பு (WHO) வரவேற் கிறது. இதன் மூலமாக மதுவின் தீமைகளைக் கட்டுப்படுத்துவது எளிது. தனியாரிடம் விட்டால் கடைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், திறந்திருக்கும் நேரத்தைக் குறைத்தல், சிறுவர்களுக்கு விற்காமல் தடுத்தல் போன்ற கட்டுப்பாடுகளைச் செயலாக்க முடியாது, அவர்கள் இலாபம் மட்டுமே நோக்கமாக செயல்படுவார்கள் என உலக நலவாழ்வு அமைப்பு எச்சரிக்கிறது.

ஆனால், தமிழக அரசு மக்கள் நலனை காக்க வேண்டும் என்ற நோக்கில் மதுவிற்பனையை அரசுடைமை ஆக்கவில்லை. மாறாக, வருவாயைப் பெருக்கும் நோக்கத்தில் தான் கடைகளை நடத்துகிறது.

ஒரு தனியார் நிறுவனத்தை போன்றே அரசாங்கமும் மதுவை மக்கள் மீது திணித்து இலாபத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. எனவே, தமிழகத்தின் சிக்கல் அரசு மது விற்பது அல்ல, மாறாக விற்பதற்கான அரசின் நோக்கம்தான் கேடு செய்கிறது.

இந்நிலை மாற்றப்பட வேண்டும். தமிழகத்தில் மதுவிற்பனையை மீண்டும் தனியாரிடம் விட்டால் அது மதுக்கேடுகளை மென்மேலும் அதிகரிக்கவே செய்யும். எனவே தமிழக அரசு தனது மதுவிற்பனையை அதிகரிக்கும் கொள்கையை உடனடியாகக் கைவிட்டு, கட்டுப்படுத்தும் கொள்கையை முன்னெடுக்க வேண்டும்.

*எனவே*

**11.1 மது விற்பனையில் தனியாரை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. அரசின் நோக்கம் விற்பனையை அதிகரித்து இலாபம் ஈட்டுவதாக இருக்கக் கூடாது. மதுவைக் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும்.**

**11.2 சராசரி அரசு ஊழியர்களைப் போன்று டாஸ்மாக் ஊழியர்களுக்கும் ஒரு நாளில் 8 மணி நேர வேலை, விடுமுறை நாட்களில் விடுமுறை, இதர சலுகைகள் அனைத்தும் அளிக்கப்பட வேண்டும்.**

**11.3 டாஸ்மாக் ஊழியர்களின் ஊதியத்துடன் மது விற்பனையை தொடர்புபடுத்தக் கூடாது. டாஸ்மாக் ஊழியர்கள் அனைவருக்கும் ஊதிய உயர்வு அளித்து, 'மது விற்கும் அளவுக்கு ஏற்ப ஊக்கத்தொகை அளிப்பதை' நிறுத்த வேண்டும். மதுபானம் விற்றாலும் விற்காவிட்டாலும் அனைத்து டாஸ்மாக் ஊழியர்களுக்கும் ஒரே அளவிலான ஊதியம் வழங்க வேண்டும்.**

## மாநில மது ஒழிப்பு ஆணையம்

## 12. மாநில மது ஒழிப்பு ஆணையத்தை தமிழ்நாடு அரசு அமைக்க வேண்டும்.

*எதற்காக?*

மது ஒழிப்பு தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளும் தனித் தனியாக இல்லாமல், ஒருங்கிணைந்த முறையில் நடைபெற்றால்

தான் மதுவின் தீமைகளை கட்டுப்படுத்த இயலும் என்கிறது உலக நலவாழ்வு அமைப்பு (WHO). அதே போன்று மது ஒழிப்பு சட்டங்கள், திட்டங்கள் அனைத்தும் முறையாக செயலாக்கப்படுகிறதா என்பதை கண்காணிப்பதும், திறனாய்வு செய்வதும் கட்டாயமான தேவை யாகும்.

*எனவே*

**12.1. மது ஒழிப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், கண் காணிக்கவும் மாநில அளவிலான, தன்னிச்சையாகச் செயல்படக் கூடிய 'மது ஒழிப்பு ஆணையம்' (Alcohol Control Authority) முழுமையான நிதி மற்றும் செயலக ஆதரவுடன் - முதலமைச்சர் உள்ளிட்ட அதிகாரமிக்கவர்களை உள்ளடக்கிய அமைப்பாக நிறுவப்படவேண்டும். இந்த அமைப்புக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.**

## ஆராய்ச்சி

## 13. மதுப்பழக்கம் குறித்த ஆராய்ச்சி அமைப்பு நிறுவப்பட வேண்டும்.

*எதற்காக?*

மது ஒழிப்புக் கொள்கை மற்றும் அதன் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவும், காலத்துக்கேற்ற கொள்கையை வகுக்கவும், சட்டங்கள் மற்றும் திட்டங்களின் செயல்பாட்டை உறுதிப்படுத்தவும் - உரிய ஆய்வுகள் தேவை. அவ்வாறே, மதுப் பழக்கத்தின் தீமைகள் குறித்து தெளிவாக அறியவும், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்டறியவும் ஆராய்ச்சிகள் தேவைப்படுகின்றன. தற்போது கிடைக்கும் ஆய்வு முடிவுகள் பெரும்பாலும் மேலை நாடுகளைச் சார்ந்தும், ஒரு சில வெளி மாநிலங்களைச் சார்ந்தும் உள்ளன. இவை, தமிழ்நாடு அளவிலான பயன்பாட்டிற்கு அவ்வளவாக பயன்படக் கூடியவை அல்ல. இக்குறை களையப்பட வேண்டும்.

*எனவே*

**13.1 முழுமையான நிதி வசதி மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய குடிப்பழக்கம் மற்றும் போதைப் பொருட்கள் குறித்த ஆய்வு அமைப்பினை உருவாக்க வேண்டும்.**

**அரசுசாரா அமைப்புகள்**

## 14. மக்கள் அமைப்புகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளை மது ஒழிப்பு நடவடிக்கைகளில் பங்கெடுக்கச் செய்ய வேண்டும்.

*எதற்காக?*

அரசின் கொள்கை, சட்டம் போன்றவை மட்டுமே மது ஒழிப்புக்குப் போதுமானவை அல்ல. அவற்றை செயல்பட வைக்க மக்களின் பங்கேற்பு கட்டாயமாகும். மகளிர் அமைப்புகள், தன் உதவிக் குழுக்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசுசாரா தொண்டு அமைப்புகள் போன்றவற்றின் பங்களிப்பு தேவை. மதுவின் தீமை, மது ஒழிப்புச் சட்டம் குறித்த விழிப்புணர்வை பரவலாக்குதல், அரசாங்கத்தை செயல்பட வைத்தல், கண்காணித்தல் போன்ற பல நிலைகளிலும் மக்களின் பங்கேற்பு இருந்தால் மட்டுமே மது ஒழிப்பு சாத்தியமாகும். இத்தகைய மக்கள் பங்கேற்புக்கு அரசு வழி செய்வதுடன் அதனை ஊக்கப்படுத்தவும் வேண்டும்.

*எனவே*

**14.1 மக்கள் அமைப்புகள், அரசுசாரா அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் மது ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வழிவகுக்கும் சிறப்புத் திட்டங்களை போதுமான நிதி உதவி மற்றும் வழிகாட்டுதல்களுடன் ஏற்படுத்த வேண்டும்.**

**மதுபான நிறுவனங்கள்**

## 15. மதுபான நிறுவனங்களிடமிருந்து விலகி நிற்பதை அரசு தனது கொள்கையாக அறிவிக்க வேண்டும்.

*எதற்காக?*

மேலை நாடுகளில் மதுவிற்பனை குறைந்து வருவதால் இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளில் மது விற்பனையை அதிகரிக்க பன்னாட்டு மதுபான நிறுவனங்கள் முயற்சித்து வருகின்றன. இந் நிலையில் மது ஒழிப்பு நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்து மானால், அதனை சீர்குலைக்க மதுபான நிறுவனங்கள் முயலக்கூடும்.

அரசின் கொள்கை வகுப்பில் தலையிடுதல், மாதிரி சட்டங்களை உருவாக்குதல், தொழில் கூட்டமைப்புகள் மூலமாக அழுத்தம் கொடுத்தல், ஆராய்ச்சியாளர்களுக்கு நிதி உதவி செய்து போலியான தகவல்களைப் பரப்புதல், அரசின் மது ஒழிப்புக்கான குழுக்களில் தங்களது பிரதிநிதிகளையும் சேர்த்தல் - போன்ற பலவிதமான செயல்களையும் மதுபான நிறுவனங்கள் மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது.

*எனவே*

15.1. **அரசின் மது ஒழிப்புக் கொள்கை, சட்டம், மதுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், திட்டங்கள் எதிலும் மதுபான நிறுவனங்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்கேற்க அனுமதிக்கக் கூடாது. அவ்வாறே மதுபான நிறுவனங்களிடமிருந்து நேரடி யாகவோ, மறைமுகமாகவோ நிதி உதவி அல்லது வேறு வகையான உதவிபெறும் நபர் எவரையும் பங்கேற்க அனுமதிக்கக் கூடாது. மதுபான நிறுவனங்களை உள்ளடக்கிய தொழில் கூட்டமைப்புகளையும் இவற்றில் அனுமதிக்கக் கூடாது.**

15.2. **மது ஒழிப்பு நடவடிக்கைகள், திட்டங்கள், மருத்துவ சேவைகள், மனிதாபிமான சேவைகள் எதற்காகவும் மதுபான நிறுவனங் களிடமிருந்தும், மதுபான நிறுவனம் சார்ந்தோரிடமிருந்தும் நிதிஉதவி அல்லது வேறு எந்த விதமான உதவியையும் பெறக் கூடாது.**

## 15. முடிவுரை

இன்று எழுந்துள்ள கேள்வி - தமிழ்நாடு அரசின் கொள்கை மதுவைக் கட்டுப்படுத்துவதா அல்லது ஊக்கப்படுத்துவதா என்பது தான். மது விற்பனையை ஊக்கப்படுத்துவதைக் கொள்கையாகக் கொண்டால் அதன் தீமையைக் கட்டுப்படுத்த இயலாது. மதுவைக் கட்டுப்படுத்துவதுதான் கொள்கை என்றால் அரசு விற்பனையை ஊக்கப்படுத்த முடியாது. எனவே, மது ஒழிப்பா? மதுத் திணிப்பா? எது தமிழ்நாடு அரசின் கொள்கை என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.

'கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவது, அரசின் வருவாயைக் காப்பது' ஆகிய நோக்கங்களுக்காக விற்பனைக்கு இலக்கு நிருணயிப்பதாகக் கூறுவதன் மூலம் 'மதுத் திணிப்புதான் அரசின் கொள்கை' என சுற்றிவளைத்து ஒப்புக் கொள்கிறது தமிழ்நாடு அரசு. மக்கள் நலனுக்கு பெரும் கேடு செய்யும் ஒரு கொடிய போதைப் பொருளை திட்டமிட்டு மக்கள் மீது திணிப்பதன் மூலம் 'மக்கள் நல அரசு' எனும் தகுதியை தமிழ்நாடு அரசு இழந்துவிட்டது. இது இந்திய அரசியல் அமைப்பின் 47ஆம் பிரிவுக்கு எதிரானது. உலகின் எந்த ஓர் அரசும் செய்யத் துணியாத வெட்கக்கேடான செயல்.

ஆட்சியாளர்கள் இனியாவது மனம் திருந்த வேண்டும். மது திணிப்புக் கொள்கையைக் கைவிட்டு, மது ஒழிப்புக் கொள்கைக்கு மாறவேண்டும். அந்த வகையில் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள மது ஒழிப்புத் திட்டத்தினை செயல்படுத்த முன்வர வேண்டும்.

இந்திய அரசியல் அமைப்பின் 7ஆவது அட்டவணையில் மாநிலப் பட்டியலில் மதுபானம் வைக்கப்பட்டுள்ளதால், மது ஒழிப்பு முழுக்க முழுக்க மாநில அரசின் கடமையாகிறது. இதில் நடுவண் அரசின் பங்கு ஏதுமில்லை. எனவே, முழு மதுவிலக்கினை நோக்கிய ஒருங்கிணைந்த மது ஒழிப்புக் கொள்கையை (Integrated and Comprehensive Alcohol Control Policy) உருவாக்கி செயல்படுத்த தமிழ்நாடு அரசு உடனடியாக முன்வர வேண்டும். இதன்மூலம் இந்தியாவின் இதர மாநிலங் களுக்கும் ஒரு வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

கஞ்சா, அபின், ஹெராயின் போன்ற போதைப் பொருட்கள் ஏற்படுத்தக்கூடிய அதே கொடிய பாதிப்புகளை மதுபானமும் ஏற்படுத்துகிறது. இக்கொடிய போதைப் பொருளை படிப்படியாக ஒழிக்க முடியும். ஒழிக்க வேண்டும். இதன் மூலம் அண்ணல் காந்தி, தந்தை பெரியார், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், கர்மவீரர் காமராசர், மூதறிஞர் இராசாசி, பேரறிஞர் அண்ணா கண்ட கனவான மதுவிலக்கு என்ற இலக்கினை படிப்படியாக அடைய முடியும். அதற்கு வழிசெய்ய வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

*ஆதாரம்:*


1. WHO Expert Committee on Problems Related to Alcohol Consumption, Second Report, Geneva 2007.
2. Alcohol Atlas of India, IAPA, New Delhi 2008,
3. WHO Global Status Report on Alcohol 2004,
4. Public Health Problems Caused by Harmful Use of Alcohol: Gaining Less or Loging More? WHO SEARO, New Delhi 2006,
5. Stratagies to reduce the harmful use of alcohol, Report by the Secretariat, WHO, Geneva 2008,
6. Alcohol: No Ordinary Commodity-Research and Public Policy, Oxford, London 2003.
7. Paying the Tab: The Costs and Benefits of Alcohol Control, Princeton University Press, USA 2007.
8. Burden and Socio-Economic Impact of Alcohol- The Bangalore Study, WHO SEARO, New Delhi 2006.
9. Interpersonal violence and alcohol, WHO Policy Briefing, Geneva 2006
10. Alcohol and Injury in Emergency Departments, WHO Geneva 2007
11. Alcohol Use and abuse - What you should know? WHO SEARO, New Delhi 2006
12. Alcohol as a cause of Cancer, Cancer Institute NSW Monograph, Australia 2008
13. Alcohol and Health, Institute of Alcohol Studies, UK 2008
14. Alcohol Alerts, National Institute of Alcohol Abuse and Alcoholism, U.S. Department of Health & Human Services, USA.
15. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை – கொள்கை விளக்கக் குறிப்பு 2008 – 2009, தமிழ்நாடு
16. Alcohol Consumption Control - Policy options in the South-East Asia Region, Agenda Item 10, Regional Committee, 59 Session WHO, 2006.



*"மது அருந்திய ஒருவன் தன்னையே மறந்துவிடுகிறான்; போதை நீடிக்கும் வரையில், பயனுள்ள எதையும் செய்வதற்கு அறவே இயலாதவனாக இருக்கிறான்.*

*குடிப்பழக்கத்தைக் கற்றுக்கொள்கிறவர்கள் தங்களையும், தங்களைச் சார்ந்தவர்களையும் நாசத்துக்கு உள்ளாக்குகிறார்கள்.*

*அவர்களுக்கு மட்டு மானமரியாதை உணர்ச்சிகள் இல்லாமல் போய்விடுகின்றன.*

*குடி ஒருவனுடைய உடம்பையும், ஒழுக்கத்தையும், அறிவையும், ஆக்கத்தையும் நாசமாக்குகிறது."*

— **மகாத்மா காந்தி**

*(ஆரோக்கியத் திறவுகோல் நூலில்)*